# கலைச்செல்வி



# ஏ. கே. எஸ். & சன்ஸ்

நகைகளுக்கும் வைரங்களுக்கும்

# "நகை மாளிகை"



வட இலங்கையின்

மிகப் பெரிய

நகை வியாபாரிகள்



★

*Dial:* 519 *Cables:* MAGUDHOOM

Visit

# A. K. S. & SONS

MANUFACTURING JEWELLERS



## "JEWEL HOUSE"

**For Jewels & Diamonds**

**JAFFNA.**

# கலைச் செல்வி

(ஈழதேவி இதனுடன் இணைந்துள்ளது)

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்" —பாரதி


| கலை 1 | ஆடி 1958 | காட்சி 1 |
|---|---|---|

இணை ஆசிரியர்கள்:
**தமிழ்வேள்; சிற்பி.**

துணை ஆசிரியர்கள்:
**தமிழ்ச் செல்வன்**
**ஈழத்துச் சோமு**

ஓவியர்:
**ஆதவன்**

பிரசுரிப்பவர்:
**சு. இராஜநாயகம் B. A.**

விளம்பர நிர்வாகி:
**சி. நா. கணேசன்**

சேக்குலேஷன்
**இ. சிவலிங்கம்**

வெளியீடு:
**தமிழ் இலக்கிய மன்றம்**
**கந்தரோடை,**
**சுன்னுகம்.**

விலை சதம் **35**


## உள்ளே....!


| | |
|---|---|
| இந்த இதழ்...... | 3 |
| அன்பார்ந்த நேயர்களே | 5 |
| மாசுடை மங்கையா? | 7 |
| இதயவானிலே | 14 |
| குறை தீர்ந்தது | 19 |
| புதுமைப் பித்தன் | 29 |
| காளி தரிசனம் | 34 |
| குற்றம் அறியுமா? | 36 |
| புலவர் நினைவு | 41 |
| புத்தக விமர்சனம் | 43 |
| வளரும் எழுத்தாளர் பகுதி | 46 |
| அறிவரங்கம் | 48 |
| ஏன் படைத்தாய்? | 49 |
| சினிமா பகுதி | 57 |

## சுன்ஞகத்தில்

★ ருசிகரமான உணவு

★ சுவை நிறைந்த சிற்றுண்டிகள்

★ காப்பி, தேநீர், குளிர்பானங்கள்

★ ஆனந்தவிகடன், கலைச்செல்வி, மற்றும் மலிவுப் பிரசுரங்கள்.

அனைத்தும் கிடைக்குமிடம்

# பிராமணுள் கிளப்

ஒன்றே.

கல்வி அறிஞர், அரசியல் தலைவர்கள், இலங்கை-இந்திய எழுத்தாளர்கள், அனைவரது பாராட்டையும் பெற்ற ஸ்தாபனம்.

## இன்றே விஜயம் செய்யுங்கள்

## பிராமணுள் கிளப்

**(Prop: S. Jeganathan)**

ஸ்டேசன் வீதி, சுன்ஞகம்.

# இந்த இதழ்

இலக்கியப் பணி புரியவேண்டுமென்று துடி துடித்துக் கொண்டிருக்கும் இளந் தமிழர்களின் இன்பக் கனவு இன்று நனவாகின்றது. அறி ஞர்கள் வாழ்த்தியம்ப, அன்பர்கள் வரவேற்க, அழகு தவழ் "கலைச்செல்வி" தன் அறிவுப் பணியை ஆரம்பிக்கின்றாள். கன்னல் மொழி பேசிக் கன்னித் தமிழ் வளர்ப்பாள் 'கலைச்செல்வி'

ஈழத்துத் தமிழன்பர்களிடம் நல்ல கதைகள் கட்டுரைகளை எழுதவேண்டும் என்ற ஆர்வமும், படிக்கவேண்டும் என்ற துடிப்பும் இருக்கின்றன. ஆனால் நமது தனித்தன்மையை நிலைநாட்டி, நம் கலைத்திறனையும் கற்பனை வளத்தையும் உலகோ ர்க்கு எடுத்துக்காட்டி எல்லோர்க்கும் மகிழ்வூட் டக்கூடிய கலைத்தூதன் இங்கு இல்லை.

பணம் படைத்தவர்கள் பலர் இருக்கின்றார் கள்; பத்திரிகைக்கு முதலீடு செய்யப் பயப்படு கின்றார்கள். தலைசிறந்த அச்சகங்கள் இருக்கின் றன; தமிழ்ப் பத்திரிகை வெளியிடத் தயங்கு கின்றன.

மற்றவர்கள் செய்ய மறுத்ததை, மனத் துணிவுடன் செய்யத் தொடங்குகின்றோம் நாம். எழுத்தாள நண்பர்கள் எல்லாவித உதவிகளை யும் செய்வதாக எழுதிக்கொண்டிருக்கிறார்கள். "வண்ணக் **கலைச்செல்வி**யை வரவேற்கக் காத்தி ருக்கிறோம்" என்று வாசகர்கள் எழுதுகின்றார் கள். வியாபார அன்பர்கள் வேண்டும் போதெல் லாம் விளம்பரங்கள் கொடுத்து உதவுவதாக

உறுதி கூறுகின்றார்கள். நம் மனத்துணிவை மேன்மேலும் வளரச் செய்யும் அன்பர்கள் அனை வர்க்கும் நமது மனங்கனிந்த நன்றி.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ வேண்டும். தமிழனின் மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றிற்கு, அவற்றின் தொன்மை மணம் குன்றாது புதுமை மெருகேற்ற வேண்டும். இவைதான் "கலைச்செல்வி"யின் நோக்கங்கள்.

'ஈழதேவி'யை இதுவரை ஆதரித்து வந்த சந்தா நேயர்கள், வாசகர்கள், எழுத்தாளர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள் தொடர்ந்து 'கலைச்செல்வி'யையும் ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றோம்.

வணக்கம்!

★ ★ ★

## நீள் யாண்டு வாழியவே.

— சி. நா. கணேசன் —

கலை உலகு கண் விழிக்கும் காலத்தே நற்
கவிதைகளும், கவிஞர்களும் கருணை கூட்டி
சிலை உருவில் வடித்து வைத்த தமிழை இன்றே
செயலுணர்வில் செப்பனிடச் சேரும் பண்பை
தலை கொடுத்தும் காத்துவக்கும் தமிழர் தங்கள்
தாயெனவே வழுத்துகின்ற கலைத்தெய்வத்தை
விலை கூறிப் பெறமுடியா விஞ்ஞானத்தை
விரும்பு சிறுகதைகள், கட்டுரைகளெல்லாம்
மலையளவாய் வளர்த்துவர மார்பு தட்டி
மங்காத புகழோங்கிச் சிறப்புக் காட்டி
குலையாத முயற்சியொடு மக்கள் கூட்டம்
குவிந்துடனாய்ப் பணி செய்து கோலம் காட்ட
நிலையுடனே வளருகவே! கலைச்செல்வியே!
நீள் யாண்டு வாழியவே! கலைச்செல்வியே!

# அன்பார்ந்த நேயர்களே!

**வணக்கம்.** இம் மாதம் தொடக்கம் "**ஈழதேவி**" "**கலைச்செல்வி**"யாக மாறுகின்றாள். பெயர் மாற்றம் பெரும்பாலான நேயர்களின் வேண்டுகோளுக்கிணங்கச் செய்யப்பட்டது. கலைகள் பல வளரத் துணை புரியும் ஈழதேவி உண்மையிலேயே கலைச்செல்விதானே! நிர்வாகத்திலும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கழுத்துறைத் தமிழ்க் கழகத்தின் வெளியீடாக வந்த பத்திரிகை, இனிமேல் தமிழ் இலக்கிய மன்றத்தின் ஆதரவில் ஒவ்வொரு தமிழ் முதலாந் திகதியின் போதும் ஒழுங்காக மலரும். ஆசிரியர் குழுவில் புதிதாக "தமிழ்வேள்", "தமிழ்ச்செல்வன்" ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

"வளரும் எழுத்தாளர் பகுதி" இவ்விதழில் தொடங்குகின்றது. மாணவர் திட்டம் பற்றி எம்முடன் தொடர்பு கொண்டுள்ள மாணவர்கட்கு அறிவித்துள்ளோம். மேலும் விபரம் வேண்டுவோர் எமக்கு எழுதுக. விமர்சனப் போட்டி பற்றிய அறிவித்தல் பிறிதோரிடத்தில் வெளியாகியிருக்கின்றது. "கலைச்செல்வி"யில் வெளியிடுவதற்கான பொன்மொழிகளை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். "அன்பு" என்பது பற்றிப் பல்வேறு அறிஞர்கள் கூறியவற்றைத் தொகுத்து அனுப்புவீர்களா?

பங்குனி இதழ் அட்டைப் படப் போட்டிக்கு நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள் வந்தன. எதிர்பாராது நடைபெற்ற சில நிகழ்ச்சிகளால், அரைவாசிக்கு மேல் அக்கினி தேவனுக்கு இரையாகிவிட்டன. போட்டியின் முடிவை அறிவிக்க முடியாததற்காக வருந்துகின்றோம். பங்கு பற்றிய அனைவர்க்கும் எமது நன்றி. அடுத்த இதழில் புதிய சிறுகதைப் போட்டி பற்றிய விபரங்களை வெளியிட முடியுமென நினைக்கின்றோம். தற்பொழுது ஏற்பட்டுள்ள அவசரகால நிலைமை காரணமாக ஆண்டுவிழாவும் காலவரையின்றி ஒத்திவைக்கப் பட்டிருக்கின்றது. ஆண்டு மலர் வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

"கலைச்செல்வி" புரட்டாதி இதழ் 'பாரதி மலராக' வெளிவருமென்பதை நினைவூட்டுகின்றோம். வணக்கம்.

# நேயர்கள் கருத்து

[தமது கருத்தை எழுதும் அன்பர்கள் அஞ்சல் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'எங்கள் கருத்து' என்று தவறாது குறிப்பிட வேண்டும்.]

## கலைச் செல்வியா?

ஈழதேவி என்ற பத்திரிகையை கலைச் செல்வி என்ற பெயருடன் வெளியிடப் போவதாகக் கடந்த இதழில் கண்ணுற்றேன். பெயர் மாற்றத்தோடு தரமும் உயர்ந்து நல்ல முறையில் வெளிவருமா அல்லது..................?

தா. மார்க்கசகாயம்
மானிப்பாய் 25-6-58.

## சிறு க(த்)தைகள்

சித்-வைகாசி ஈழதேவியில் வெளியான 'ஒரு தெய்வம்', 'அமைதி எங்கே' என்ற விடயங்களையும் சிறுகதைகள் பட்டியலில் சேர்த்தால், அசல் கதைகளை எங்கே கொண்டு போய்க் கொட்ட?

செல்வி சு. சௌந்திரநாயகம்
பரந்தன் 26-6-58.

## சொல்காப்பியம்

கடந்த ஈழதேவியில் வெளியான 'அன்புவழி' ஒரு சிறந்த கவிதை. சொற்களை அடுக்கியடுக்கி பாடலை நீட்டாமல் இரத்தினச் சுருக்கமாகக் கூறியிருந்தால் பாராட்டுதற்குரியது.

இ. தங்கராசா
மருதானை 25-6-58.

## படுஜோர்

நகைச்சுவைக் குமரனின் 'படுபொய்'யைச் சென்ற இதழில் படித்தேன் அது படு...படு...ஜோர்.

சாத்தனூர் அரியகுட்டி
புலோலி தெற்கு 30-6-58.

## செத்தவர்களுக்கு மட்டும்.

எழுத்தாளரை, ஓவியரை, ஏனைய கலைஞர்களை, அவரவர் உயிரோடு இருக்கும் போதே அவர்களுடைய படைப்புகளுக்கு மதிப்புத் தந்து, ஆக்கியோரைப் போற்றவேண்டும் என்ற கருத்தை 'வாழ்கின்ற பாரதி' என்ற கட்டுரையில் அவதானித்தேன். வரவேற்கக் கூடியதோ. ஆனால் 'செத்துச்சிவலோகம் போனவர்களுக்கு மட்டும்' என்ற சட்டத்தின் அடிப்படையில் இயங்குகிறதே உலகம். ஏன்?

திருமதி க. வேலுப்பிள்ளை
வேலணை 25-6-58.

## ஐயோ, பாவம்

சென்ற ஈழதேவியில் வெளியான சிறுகதைகள் எல்லாமே இதயத்தைத் தொடக்கூடியன. சிலவற்றைப் பன்முறை படித்து உருகு உருகென்று உருகினேன்.

"மலர்மாறன்"
மட்டக்களப்பு 1-7-58.

# மாசுடை மங்கையா?

மூ. இராமலிங்கம்

**தமிழ்ப் பெருமக்களே!**

"நெஞ்சை யள்ளும் சிலப்பதிகார
மென்றோர் மணி
யாரம் படைத்த தமிழ்நாடு"

எனக் கூறுகிறார், பாரதத்தின் அமரகவி பாரதியார். ஆம், நினைதொறும் நினைதொறும் நெஞ்சத்தை நெகிழ்வித்துச் சிந்தைக்கு விருந்தளிப்பது தான் 'சிலப்பதிகாரம்'. சிலப்பதிகாரத்தின் இத்தகைய சீர் பெறு மேன்மைக்கும் உரியவள் கற்புக்கொழுந்து, பொற்புடைச் செல்வி, 'போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்று மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்து'க் கண்ணகியென்பாளே. இத்தகைய பேருக்கும் புகழுக்கும் பேராசைப்படவில்லை. போட்டியிடவுமில்லை. பல மேனாட்டுக் காவியங்களிலும் சரி கீழ்நாட்டுக் காவியங்களிலும் சரி கதாசிரியர்கள், தலைவன் தலைவியரை மேம்படுத்திக் காட்டுமிடத்து. அவர்களின் எதிரிகளின் குணாதிசயங்களைத் தாழ்த்தியே கூறுவார்கள். ஆம். நான் 'எதிரிதான்; கருணையற்ற சில கயவர்களின் கன்னெஞ்சில் நான், பெருங்குடி வாணிகன் பெருமடமகளின்' எதிரியாகவே இன்றும் இருந்து வருகிறேன். ஆனால் துறவி இளங்கோவடிகளின் தூய உள்ளத்தில் இத்தகைய இழிவு எண்ணங்கள் எள்ளளவேனும் இடம் பெற்றிருக்கவில்லை என்பது ஏதோ உண்மைதான். அதனாற்றான் போலும் மற்றைய ஆசிரியர்களின் முறைக்கு முரண்பாடாக, தலைவன் தலைவியருக்குச் சரிநிகர் சமானமாக 'எதிரி' எனப்படும் என்னையும் பற்பல இடங்களில் போற்றிப் புகழ்ந்திருக்கிறார். இதற்குச் சான்றாக,

"பிறப்பிற் குன்றாப் பெருந்தோள்
மடந்தை.........
...................................
ஆடலும் பாடலும் அழகும்
என்றிக்
கூறிய மூன்றினொன்று குறை
படாமல் ஏழாண்டியற்றி........."

என்னும் இவ்வரிகளில் எனது கலைஞானத்தை எடுத்து இயம்பியுள்ளார். இன்னும் என்னைப்பற்றிக் குறை

---

கண்ணகிக்கு விழாவெடுத்த புங்குடுதீவு அன்பரின் பிறப்பிடம். பி. எஸ்சி. பட்டதாரி. விஞ்ஞானத்திற்கும் மேலாக விரும்பிப் படிப்பது தமிழிலக்கியம்.

படக் கூறுபவர்களையும் பின் வரும் சந்தர்ப்பத்தில் பிழையை உணரும்படி செய்துள்ளார் இளங்கோவடிகள்.

'மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினுள்' என என்மீது வீண்பழி சுமத்தி என்னைப் பிரிந்தேகிய ஆருயிரனைய கோவலன் என் இரண்டாம் திருமுகத்தைக் கண்ணுற்றதும்,

"தன்தீதிலளெனத் தளர்ச்சி நீங்கி
என்தீ தென்றே எய்திய
அணர்ந்தான்"

எனத் தன்னைத்தான் நொந்து கொண்டதாக எடுத்து விளக்குகிறார் இளங்கோ.

சிந்தனைச் செல்வர்காள்! நான் ஏதோ பிதற்றிக் கொண்டேபோகிறேன் என்று எண்ணவேண்டாம். எல்லாம் காரணமாகத்தான். இதோ என்னை இன்று இத்தனை இலக்கிய இரசிகர்களுக்கு எதிரில் குற்றவாளிக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறார்கள், எண்ணிலடங்காக் குற்றங்கள் சுமத்தி 'எதிரி' என்னும் இழி பெயரும் சூட்டி இத்தனைக்கும் நான் செய்த குற்றங்கள்...?

கொலைபுரிந்தேனு? ஆமாம். 'இருநிதிக் கிழவன் மகன்' கோவலனது கொலைக்குக் காரணமாயிருந்த கொடும்பாவியாம். கொள்ளையடித்தேனு ஆம். அதுவும் செய்தேனும். நல்ல நங்கை கண்ணகியின் இல்லற வாழ்க்கை இன்பத்தைக் கொள்ளையடித்தேனும் கோவலன் கைப்பற்றி.

பிறர் பொருள் கவர்ந்தேனு? ஆமாம்

"குலந்தருவான் பொருட் குன்றந் தொலைத்த" குற்றமும் என்பாலதேயாம். அறநெறி தவறினேனு? ஆமாம் அயலார் கொழுநனை அன்புறத் தழுவி இன்பம் நுகர்ந்தேன். கற்புநெறி தவறினேனு ஆம். கற்புடைப் பெண்டிர் என்பது தன் கொழுநனன்றிப் பிறர் நெஞ்சு புகாமையாதலின் அதிலும் தவறி அல்லற் படுகிறேன்.

ஏதோ இவன் என் சிற்றறிவிற் கெட்டியவாறு என் மாசறு மனத்தையும் தூய ஒழுக்கத்தையும் மேற்கூறிய குற்றச்சாட்டுகள் அனைத்திற்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதையும், இவற்றிற்கு என்றும் உறுதுணையாய் நின்று சான்று பகர முற்றுந் துறந்த அடிகள் இளங்கோவே தன் இணையற்ற இலக்கியக் காவியத்தின் கண் இருக்கின்றார், என்பதையும் எடுத்து விளக்கித் தீர்ப்பை இலக்கிய இரசிகர்களாகிய உங்களிடத்

திலேயே விட்டு விடைவிழைகிறேன்.

கோவலன் கொலைக்கு நான் குற்றவாளி! இளங்கோவடிகளின் இதயமே இருண்டு விடாதா இதனைக் கேட்க? தமிழிலக்கியம் தக்க ஆராய்ச்சியின்றி இவ்விதம் தாழ்ந்துவிட்டதா எனத் தயங்கமாட்டாரா? இம்மாநிலத்தோரது மடமையை எண்ணி எண்ணி எள்ளி நகையாடமாட்டாரா?

“அவ்விய நெஞ்சத்தான்
ஆக்கமும் செவ்வியாம்
கேடும் நினைக்கப்படும்.”

இஃது தெய்வப்புலவர் திருவள்ளுவ நாயனாரது திருவாக்கு. இந்நாவலந் தீவினில் நடைமுறைக்கு மாறாக எவையெல்லாம் நடைபெறுகின்றனவோ அவையெல்லாம் முன்செய் வினைப்பயன், எனப் பகுத்தறிதல் வேண்டுமென்கிறது நம் தமிழ் மறை. அவ்வாறே தான் கோவலன் குலமாதுடன் பட்ட பல இன்னல்களுக்கும் அவரது அகால அழிவிற்கும் காரணம் அவள் செய்துள்ள முன்வினைப் பயனேயன்றி, நானுமல்ல பூம்புகார் நங்கையுமல்ல என்பது வெள்ளிடைமலை. இதனை நூலாசிரியர் இளங்கோவடிகளும், பலவிடத்து, பலர் வாயிலாக எடுத்தறிவித்திருக்கிறார்.

“நளமகாராஜன் குற்றமேதுமற்ற குலக்கொடியாம் தமயந்தியைக் கானகத்தே நள்ளிரவில் கதறவிட்டேகினதும், சக்கரவர்த்தித்திருமகன் ஜனகன் புதல்வியோடு மரவுரி தரித்துக் கொடு விலங்குறு கானகம் சென்றதும் வஞ்சனையாதுமற்ற பஞ்சபாண்டவர்கள் கண்ணிலி மைந்தன், கொடுங்கோன் மன்னன் துரியோதனனிடம் அரசபோகமனைத்தும் இழந்து தூயமனத்தினள் திரௌபதியோடு வனவாசம் செய்ததும் இன்னும் இவைபோன்ற பலவும் முன் செய்வினையால் என்பதைக் கண்டீரில்லீரோ!” எனக் கோவலன் முன்செய்வினை வசத்தால் குலக் கொடிக் கண்ணகியைப் பிரியாது பிரிந்து செல்லும் பொழுது பிரிவுத் துயருறும் அவர்களிருவருக்கும் அறிவுரையாக எடுத்தறிவிக்கிறார் இளங்கோவடிகள் கவுந்தியடிகள் வாயிலாக.

இன்னும் இயம்புகிறார் மறையவனாகிய மாடலென்பான் வாயிலாக.

“இம்மைச் செய்தன நானறி
நல்வினை,
உம்மைப் பயன் கொல்.........
...மாமணிக் கொழுந்துடன்
போந்தது”

இன்னும் ஓரிடத்தில் தன்னைத் தானே நொந்து துயருறும் கோவலன் கூறுகிறார்,

"மாயங் கொல்லோ வல்வினை
கொல்லோ
யானுளங் கலங்கி யாவது
மறியேன்"

மனைவி கோப்பெருந் தேவியின் ஊடலினால் மனஅமைதியற்றிருந்த தேராக் காவலனாகிய நெடுஞ்செழியன்,

"கன்றிய கள்வனைக் கொன்று
சிலம்பினைக் கொணர்க"

என விடுத்த அந்நேரத்தை வினை விளை காலமென எடுத்து விளக்குகின்றார் இளங்கோவடிகள். இத்தகைய சந்தர்ப்பங்கள் இயம்புவதற்கு இன்னும் பல உள. விரிவஞ்சி விடுத்தேன். அன்றி வேறொன்றும் இல்லை. எனவே இவற்றால் கோவலன் கொலையுண்டது அவர் தன் முன் செய்வினைப் பயனாலன்றிப் பிறிதொன்றினாலுமன்று.

அடுத்து 'அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க் கெதிர்த்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்" எனும் இல்லற இயல்பாகிய இவற்றில் இன்பங்காணும் மாற்றுஉள்ள வாழ்க்கையள் பூம்புகார் பூங்கொடி கண்ணகியின் வாழ்க்கையில் துன்பம் விளைத்தேனென்றால் அது சுயநலத்தின் குறைபாடு என்றுதான் கூறவேண்டும். உண்மையில் ஒருவன் சுயநலத்தைப் பேணும்பொழுது பிறர் நலம் பேணாது விடுவது இயற்கையே. இந்நிலைதான் கோவலன் என்னை வந்தடைந்த நாளில் எனக்கிருந்தது அந்நாளிலிருந்த பரந்த நோக்கமும் சட்ட திட்டமு மற்ற சமுதாய அமைப்பின் படி நான் கணிகை மாதர் குலத்தில் பிறந்தேன் என்ற ஒரே காரணத்திற்காக என்னை 'பரத்தை' 'தாசி' 'வேசி' விலைமாது' என்று பற்பல பழிச்சொற் கூறி இழிவு படுத்துவார்களேயன்றி, ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமமே 'ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் என்னும் உண்மைகளை உணர்ந்து, நானும் ஒரு மாது என் வாழ்வும் கடைத்தேற வழியுண்டு என எண்ணி என்னைக் கைப்பிடிக்க அறிவுள்ள ஆடவர்கள் யாருமில்லை. அத்தகைய தருணத்திற்றான் அபயம் தந்தார் அருந்திறல் வள்ளல் கோவலன். அவரை அன்று விலக்கி விட்டிருப்பின் என் வாழ்வும் வீணே மாய்ந்திருக்கும். எனவேதான் கோவலனைக் கைப்பிடித்தேன். என் குலத்தொழிலை நான் அறவே வெறுத்தேன். இறுதியில் உண்மை யுணர்ந்து செய்தேனே உன்னதமானதோர் முடிவு, எனக்கு மட்டுமன்றி, களங்கமில் 'கண்ணகி

மகளுக்கும்! இது போதாதா? இன்னும் இவை இயற்கைக்கு இணங்காதன வாயிருப்பின் நான் இடர்ப்படவேண்டியவளே!

இது மட்டுமா? இன்னும் பிறர் பொருள் கவர்ந்தேனும்· ஆம். 'குலந்தருவான் பொருட்குன்றந் தொலைத்தே'னெனக் கோவலனாலேயே நேரடியாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளேன் பொருட்குன்றந் தொலைந்தது யாராலும் மறுக்க முடியாத உண்மைதான். ஆனால் எங்ஙனம் தொலைந்தது என்பதைச் சிறிது எண்ணிப் பார்க்கின் அது என் குற்றமாகாது. கோவலன் மகள் மணிமேகலைக்குப் பெயரிட்டு வாழ்த்தித் தானம் வழங்கிய ஞான்று வரையறாது வந்தவர்க்கெல்லாம் வழங்கியதுமட்டுமின்றி மற்றும் இல்லையென இரப்போர்க்கெல்லாம் தினமும் இல்லையெனாது இரவல் செய்தழித்த இருஞ் செல்வம் என்னால் மட்டும் அழிக்கப்பட்டதென்பது எங்ஙனம் பொருந்தும்? கோவலனது மனங்கோணாது மகிழ்ச்சியூட்டவே நான் ஈதல் செய்தேன். இப்பொருளை இழந்ததற்கு இன்னுமொரு காரணமும் இருக்கின்றது. இன்பப் போதையில் திளைத்திருந்த கோவலன் அழிவுறு செல்வம் என்பதை அறிந்து அதனை ஈட்டும் ஆற்றலில் சிறிதும் ஈடுபடாது, மறத்தமிழ்மகன் மரபிற்கு மாறாக உழையாது உண்டு களிகொண்டார். எனவே தான் செல்வமும் தன் இயல்பிற்கேற்ப அழிந்தொழிந்தது.

கேள்வியறிவுடைய அன்பர்காள் கேண்மின்! அடுத்து அறநெறி அற்று நடந்தேனும்· அயலார் கொழுநனை அடைந்தமையினால் இதற்கு நான் மட்டுமல்ல, கோவலனும் கூடத்தான் குற்றவாளி, ஏகபத்தினி விரதத்தை அனுஷ்டிக்காமையினால் தீமையுற்ற தசரதர், இராவணன் போன்றவர்களின் உதாரணத்தை உணர்ந்து அதனை அனுஷ்டித்திருக்க வேண்டியவர் கோவலன். பெண்களுக்கு மட்டுந்தான் இத்தகைய அறநெறி அமையுமென எந்த அறநூல் அறிவுறுத்துகின்றது? மேலும், கோவலனுக்குக் கண்ணகி இதயக்கோவிலில் வைத்து இறைஞ்சக்கூடியதோர் தெய்வ அவதாரமாக தென்பட்டாள். கணவனுக்குகந்த கண்ணியமான கன்னிகையாகவன்று. கோவலன் யாவரும் போற்றக்தக்கதோர் கலைஞன் இல்லையாயினும் கலாரசிகன் என்பதை என்றும் எவராலும் மறுக்கவும் முடியாது, மறக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. அதனாற்றான் போலும்

அழகை விரும்பினுன். அதனைக்கண்டு களித்திருப்பான். கண்ணகியிடம்.

> "மாசறு பொன்னே வலம்புரி முத்தே!
> காசறு விரையே! கரும்பே! தேனே!
> ..................................
> மலையிடைப் பிறவா மணியே என்கோ!
> அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!
> ..................................
> தாளிருங் கூந்தல் தையலால்!

எனக் கோவலனே கண்ணகியை வர்ணிப்பதனுல் இவ்வுண்மை புலனுயிற்று. இன்னும் அவன் இசையையும் விரும்பினுன். இதனையும் கேட்டு இன்புற் றிருப்பான். கண்ணகியினது

> "குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த அவள்]
> மழலைக் கிழவியுடன்

ஆடலையும் அனுபவிக்க அவாவுற்றுன். அதனைத்தான் அளிக்கும் திறமையற்றவளானுள் ஆரணங்கு கண்ணகி. எனவேதான் ஆடலும் பாடலும் அழகும் என்றிக் கூறிய மூன்றிலொன்று குறை படாமல் விளங்கிய என்னைக் கண்டு களித்ததுமன்றி தன் நெஞ்சிலுங்கொண்டார். நானும் அவர் இனிய இதயத்தில் இடம்பெற்றேன். ஒன்றிற்காக மற்றொன்றைத் தியாகம் செய்தல் மனித இயல்புதானே? அடுத்தது, கற்புநெறி தவறினேனும். அதாவது கோவலன் மனது மட்டும் அன்றி பிறர் நெஞ்சமும் புகுந்த பேதையாம். ஆம். இத்தகைய இழிநிலை எண்ணந்தான் கோவலனும் என்னை விட்டுப் பிரியும் பொழுது கொண்டிருந்தார். அதனுற்றுன் போலும், 'நிலத்தெய்வம் வியப்பெய்த நீள் நிலத்தோர் மனமகிழ, நான் ஊடல் செய்வான் வீணைமீட்டிப் பாடிய பாட்டைத் தவருக உணர்ந்து "மாயப்பொய்பல கூட்டும் மாயத்தாள் பாடினுள்" என என்மீது வீண்பழி சுமத்தி விரைந்தேகிப் பிரிந்தார். இது அவரவர் மனப்பான்மையையும் சூழ்நிலையையும் பொறுத்திருக்கின்றது. நான் கணிகை குலத்தில் பிறந்தேன் என்பதற்காகவும், என் பிறப்புரிமைப் பரிசிலாம் பாடலையும் ஆடலையும் அனைவரும் அனுபவிக்கச் செய்தேனென்பதற்காகவும் நான் பிறர் நெஞ்சம் புகுந்தேனும். இதற்கு நான் தான் யாது செய்வேன்?

வாழ்க்கை என்னும் ஆழ்கடலில் வறுமை நோய், பிணி, பகைமை எனப் பற்பல சூறுவளியில் சிக்குண்டு தத்தளித்து பின் ஊக்கம், உழைப்பு, விடாமுயற்சியெனப் பல கருவிகளின் உதவி கொண்டு வெற்றியோடு கரையேறுபவனுக்கும் அதிற் தோல்வியடைந்து அலையோடு அலை

யாய் அழிந்து போகிறவனுக்கும், ஏழைக்கும் ஏழையை எள்ளி நகையாடி இழிவு படுத்தும் தன்னறிவில்லாத தனவந்தர்க்கும், இரப்பவர்க்கும் இரப்பவரை இம்சியாது புரப்பவர்க்கும், ஆண், பெண், அனைவருக்கும்,என்றும் இணை பிரியாது இரண்டறக் கலந்து நிற்கும் உறுதுணைத் தோழனும் 'விதி'யைத்தான் இங்கு விண்ணப்பிக்க விழைகிறேன்

இன்னும் வேண்டாம். இதுவே போதும். திருப்பாற்கடலின் தெள்ளமுதுண்டு தேறிய தேவர்கள் போன்று இனியதமிழ்மொழியின் இணையிலா இன்னமுத இலக்கியக் கடலில் மூழ்கித் திளைத்து என்றும் இன்புற்றிருக்கும் இலக்கிய இரசிகர்களே, உங்களிடத்தே இதன் உன்னத தீர்ப்பு.

வணக்கம்

இங்ஙனம்,

**மாதவி**

---

# கலைச்செல்வி வாழ்க

(சஞ்சீவி)


**பல்லவி**

மங்களம் தங்கு வளர்கலை தந்திட
வந்த கலைச்செல்வி வாழ்கவே.

**சரணங்கள்**

செந்தமிழ் என்ற திருக்குளத்தூடு
தேங்கு கலையென்ற தாமரைக்காடு
மைந்தரெல்லார்க்கும் பயன்படுமாறு
வந்தவட் கென்கொலோ எங்கள் கைம்மாறு. (மங்)
திங்களிற் றோன்றுமிச் செல்வியைப் போற்றி
தேசமக்க ளெல்லாம் ஆதர வாற்றி
எங்கள் மொழியினம் ஈடு விளங்க
எய்திடும் சந்ததிக் கின்பம் வழங்க (மங்)
அன்புடனின்ப அழகையெடுத்து
அறுபத்துநான்கு கலையை யுடுத்து
பண்பு சுரந்திங்கு பல்லூழி காலப்
பல்கதிர் வீசிடும் பானுவைப் போல (மங்)

தொடர் கதை






## 2. 'மீனு நீயா...?

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூரிலே நடேசபிள்ளையைத் தெரியாதவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அவர் ஒரு 'பெரியபுள்ளி' அந்த வட்டாரத்தில்! கொஞ்சம் தயாள சிந்தை படைத்தவரும் கூட. அந்தக் கிராமத்துச் சங்கத்தலைவராகச் சிறிது காலம் கடமையாற்றியவர்; பக்கத்துக் கோவில்களிலெல்லாம் ஒவ்வொரு திருவிழா படாடோபமாக, பணத்தைப் பணம் என்று பாராமல் வாரியிறைத்துச் செய்பவர். இப்படிப்பட்ட அற்ப காரணங்களுக்காகவல்ல--அவரிடம் இருந்த ஏதோ ஒரு வசீகர சக்திதான் பொது மக்களுக்கு அவர்பால் இத்தனை அன்பை உண்டுபண்ணியது.

நடேசபிள்ளை விவாகமானதின் பிறகுதான் நல்லூருக்கு வந்து வீடு வாசலை வாங்கி நிலையாக வாழலானார். ஆனால் அவ

ருடைய பாலிய வயதுக் கதை யாருக்குமே அங்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

நடேசபிள்ளை சிறுவனாக இருக்கும் பொழுதே அவருடைய தந்தையார் 'வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்' என்று எங்கோ புறப்பட்டுப் போய்விட்டார். தாயார் சிரமம் பாராது நடேசபிள்ளைக்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்துப் படிக்க வைத்தார். அவர் பலருடைய பாராட்டுதலைப் பெற்றுப் படித்து முடித்தாரோ இல்லையோ, பார்வதி என்ற ஒரு பெண்ணின் தொடர்பு எப்படியோ ஏற்பட்டுவிட்டது.

தாயாரிடம் தனது ஆசையை வெளியிடப்பயம்-அதே வேளையில் அந்தப் பெண்ணையும் கைவிட மனமில்லை. எனவே சதா சிந்தனையில் ஆழ்ந்து போய் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்.

இதை எப்படியோ அவருடைய ஒன்றுவிட்ட அண்ணன் முறையான நாராயணன் அறிந்து ஒத்தாசை செய்ய முன் வந்தார். நாராயணன் உதவியால் ஒருநாள் 'காத்தவராயன்' நாட்டுக் கூத்துப் பார்க்கப்போவதாகத் தாய்க்குக் கணக்குப் பண்ணிவிட்டு இரவோடிரவாக நல்லூருக்கு வந்து பார்வதியை மணந்து கொண்டார்.

காலகதியில் அவரைத் தாயாரும் மற்றையோரும் மன்னித்து அவருடன் உறவு கொண்டாடத் தலைப்பட்டனர். நடேசபிள்ளை ஒரு பெரிய உத்தியோகத்திலமர்ந்து ஏராளமாகப் பொருளீட்டினார். காணிகள் பூமிகளை வாங்கினார். நாராயணனையும் நல்லூருக்கே கொண்டுவந்து விட்டார்.

அந்த நடேசபிள்ளையின் ஒரே மகன் தான் சந்திரன்.

சந்திரன் மண்ணிலே வீடு கட்டி மணலிலே சமையல் செய்து விளையாடிய காலத்து அவன் பழகிக் கொண்டவர்களில் மீனாவும் ஒருத்தி.

மீனா சிங்கப்பூர் சாம்பசிவத்தின் மகள்.

சாம்பசிவம் இரண்டாவது உலகயுத்தத்திற்கு முன்பே பிழைக்க வழிதேடிச் சிங்கப்பூருக்குச் சென்றார். அங்கே அவருக்குப் பிழைப்பிற்கு ஒரு பதவி கிடைத்தது. வாழ்க்கைக்கு ஒரு வனிதை கிடைத்தாள். வேறென்ன வேண்டும்? அங்கேயே நிரந்தரமான கூடாரம் அடித்துவிட்டார்.

யுத்தம் தொடங்கினாலும் தொடங்கிற்று ஜப்பான்காரன் குண்டை வீசினாலும் வீசினான்; சாம்பசிவத்தின் மனைவி மண்

டையைப் போட்டுவிட்டாள். அப்பொழுதுதான் அவருக்கு யாழ்ப்பாணம் போக வேண்டும் என்ற நினைவு ஏற்பட்டது. ஐந்து வயது மகனைக் கையில் பிடித்தார். கைக்குழந்தை மீனுவைத்தோளில் போட்டார் பொருள் பண்டங்களையெல்லாம் மூட்டை முடிச்சுகளாகக் கட்டினார். ஈற்றில் எவ்வளவோ அல்லல் பட்டு இலங்கை வந்து சேர்ந்தார்.

நல்லூரில் நடேசபிள்ளை குடியிருந்த தெருவில் அவருக்கு ஒரு வீடு பழைய சத்திரம் மாதிரிக் காத்துக்கொண்டிருந்தது.

பையனுக்கு ஒரு பதினைந்து வயது வரும்வரை அந்தத் தெருவிலேயே--அந்த வீட்டிலேயே வாழ்ந்து வந்தார் சாம்பசிவம். அதன்மேல் வீட்டை வாசலை 'விற்றுச்சுட்டு' விட்டுப் போய்விட்டார். எங்கேயோ போய்விட்டார்.

அவர்களைப் பிரிந்ததன் பிறகு அவர்களைப் பற்றி எதுவுமே சந்திரனுக்குத் தெரியாது; தெரிந்து கொள்ள முயன்றதும் இல்லை.

மீனு பிரிந்தபோது சிறிது கவலைப்படவே செய்தான். ஆனால் இவைகள் சிறிய பராயத்தில் பெரும்பாலும் இதயத்தில் தங்கி வருத்துவதில்லை. அதுவும்போக மீனுவின் இடத்தில் ஒரு வாணி புகுந்தாள்; எனவே கொஞ்சம் கொஞ்சமாக மீனுவின் நினைவு சந்திரனின் இதயத்திரையில் இருந்து அழிந்துகொண்டு வந்தது.

வாணி! நடேசபிள்ளைக்கு ஓர் அண்ணர் நாராயணன் இருப்பதாக ஆரம்பத்தில்கூறியது வாசகர்களுக்கு நினைவு இருக்கலாம். அதே நாராயணனின் மகள்தான் வாணி. சந்திரனிலும் பார்க்க--மீனுவிலும் பார்க்க வயதில் சிறியவள்.

காலதேவன் அவர்களுடைய பிள்ளைப்பராயத்தில் மண்ணையள்ளிக் கொட்டிவிட்டு வாயுவேகத்தில் பறந்தான். அந்த ஓட்டத்திலே எத்தனையோ சுழற்சிகள், எத்தனையோ வளர்ச்சிகள், எத்தனையோ மாற்றங்கள்.

சந்திரன் ஓரளவு படித்துத் தேறிவிட்டான். அவன் தன் தந்தையின் பணத்தையோ நாராயணனின் செல்வாக்கையோ பிரயோகித்து ஒரு நல்ல உத்தியோகம் தேடிக்கொண்டிருக்கலாம். ஆனால் அவன் அதையெல்லாம் விரும்பவில்லை. தொழில் என்று ஒன்று கிடைப்பதானால் ஓர் ஆசிரியர் தொழில் கிடைக்க வேண்டும்

வேறு பதவிகள் வேண்டவே வேண்டாம் என்பது சந்திரனின் கொள்கை. அவன் எண்ணமும் முயற்சியும் வீண் போகவில்லை.

தமிழாசிரியர் பயிற்சித் தேர்வுப் பரீட்சையில் சந்திரன் தேறியதும் அவன் அடைந்த மகிழ்ச்சி இவ்வளவு அவ்வளவல்ல. அவனுடைய ஆனந்தம் பெருகியதற்குக் காரணம் தன் எண்ணம் ஈடேறிவருகிறது என்பதற்காக மட்டுமல்ல. தன்னுடன் வாணியும் பயிற்சிக்கு வருகிருள் என்பதால் தான்.

தமிழாசிரியர் பயிற்சிக் கலாசாலையைப்பற்றிப் பலரும் பலரகமான கருத்துக்கள் கொண்டிருப்பார்கள். அங்கு ஒரு முறை சென்று வந்தவர்கள் ஒரு விதமான அபிப்பிராயத்தையும் செல்லாதவர்கள் ஒரு நல்ல அபிப்பிராயத்தையும் கொண்டிருப்பது இயல்புதானே. ஆனல் சந்திரனைப் பொறுத்தளவில் ஓர் ஆசிரியனுக கடமையாற்றுவதற்கு, படிப்பைத் தவிர இத்தனை தேர்வுகளும் இத்தனை விதமான பயிற்சிகளும் வேண்டியதில்லை என்றுதான் எண்ணினுன் ஆரம்பகாலத்தில்.

அன்று மாலை! நாலு மணியிருக்கலாம். கலாசாலையையொட்டிப் பின்புறம் இருக்கும் பூங்காவில் - அந்த மாமர நிழலில் அமர்ந்திருந்தான் சந்திரன். கையில் டாக்டர் வரதராசனின் நூல் ஒன்று இருந்தது.

தெற்கு நோக்கித் திரும்பினுன். ஒரே வெளிப்பிரதேசம். கண்ணுக்கெட்டிய தூரத்தில் பனைமரங்கள் நெருக்கமாக ஓங்கி வளர்ந்திருப்பது தெரிந்தது. அவைதானே யாழ்ப்பாணம் கண்ட கற்பக விருட்சங்கள்! மத்தியிலே அவ்வூர் மக்களெல்லாரும் உரிமை கொண்டாடக் கூடிய ஓர் இடம்; ஆம், மயானம்!

"அண்ணு!"

குரல் கேட்டுச் சந்திரன் திரும்பினுன்.

வாணி நின்றிருந்தாள். கூட அவள் தோழி!

"இவள் என் தோழி. பெயர் மீனு!" என்று வாணி அறிமுகப்படுத்தி வைத்த போது சந்திரன் அவளை ஏறிட்டு நோக்கினுன். ஆமாம், அதே மீனு: முந்திய மீனுவேதான். "மீனு நீயா...''? என்று முணுமுணுத்தான்.

'அமுதைப் பொழியும் நிலவு தவறிப் பூவுலகிற்கு--அதுவும் எங்கள் கலாசாலைக்கு வந்து விட்டதோ?'

வளரும்

## வாருங்கள்! வந்து பாருங்கள்!
## பார்த்து வாங்குங்கள்!

- தித்திப்பான முந்திரிகை ஆரஞ்சு அப்பிள் பழ வகைகள்
- நவ நாகரிகத்திற்கேற்ற செருப்புகள், குடைகள், தொப்பிகள், தோற் பெட்டிகள்
- நங்கையருக்குகந்த வளையல்கள், சீப்புகள், கண்ணாடிகள், வாசனைப் பொருட்கள்
- நவீன அலுமினிய, செம்புப்பாத்திரங்கள்
- பாலர் விரும்பும் பல்வேறு வகையான விளையாட்டுப் பொம்மைகள்

உங்களுக்குத் தேவையான ஆங்கில, தமிழ் தினசரிப் பத்திரிகைகளையும், ஆனந்தவிகடன், கலைசெல்வி, ஆகியவற்றையும் உங்கள் வீட்டு வாசலில் கொண்டு வந்து கொடுக்கிறோம்.

# இந்திர பவான்
# மில்க் பார்

ஸ்டேசன் வீதிச் சந்தி, சுன்னாகம்.

# குறை தீர்ந்தது

தாழையடி சபாரத்தினம்

ராஜுவும் செல்வனும் இணைபிரியா நண்பர்கள் அவர்கள் நட்பு வளர்ந்ததற்கு அவர்கள் போக்கில் ஏதோ ஒற்றுமை இருந்துதான் இருக்கவேண்டும். பிற மனிதர்களின் கண்களால் அவர்களை அளவிட்டால் அவர்கள் எப்படித்தான் நண்பர்களாய் இருக்கிறார்களோ என்று தான் சந்தேகிக்கத் தோன்றும். ராஜு பெருந்தன்மையான குணம் படைத்தவன். அவன் போக்கே ஒரு அலாதி ஆயிரம் வந்து விட்டதேயென்று ஆனந்தப்படவும் மாட்டான், ஆயிரம் அழிந்து விட்டதேயென்று துக்கப்படவும் மாட்டான். எதையும் சாதாரணமாய்க் கொள்ளும் சுபாவம் படைத்தவன். அதுவும் நண்பர்கள் விஷயத்தில் வெகு தாராளம். அவன் பெருந்தன்மை அவனுக்கு நன்மை செய்யுமாவென்று நான் அதிகம் சிந்தித்ததுண்டு.

அதிகம் நல்லவனாயிருப்பது ஆபத்துக் கேதுவாகு மென்பதை நான் மறைமுகமாக எவ்வளவோ தடவைகளில் புலப்படுத்தி யிருக்கிறேன். ஆனால் அவன் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. நேரடியாக ஏதாவது கூறப்போனால் நீண்ட கால நண்பர்களைப் பிரிக்க நான் செய்யும் சதியாகவும் அது விஸ்வரூபமெடுத்து விடுமோ என்று பயந்தேன்.

---

*வீரகேசரி கண்டிக் கிளையில் அன்பரைக் காணலாம்'புதுவாழ்வு' கல்கியில் பரிசுபெற்றது. "ஈழத்துச் சிறுகதைக"ளில் "தூநவின் சதி" இடம் பெற்றுள்ளது.*

---

கூட்டத்தில் வழிதவறியோ அகாலவேளையில் வீடு செல்ல அஞ்சியோ நின்ற ஒரு பெண்ணை இவர்கள் அவள் வீட்டில் சேர்ப்பித்துவிட்டு வந்தார்களாம். அன்று தொடக்கம் செல்வன் அடிக்கடி அவள் வீட்டுக்குப் போய்

வரத் தொடங்கினன். அவளும் சரளமாகப் பழகினள். அவள் நட்பு ஏற்பட்டதும் ராஜுவைச் செல்வன் மறந்துவிட்டானே என்றுகூட எனக்குச் சந்தேகமெழுந்தது. "என்னை இப்பொழுதெல்லாம் செல்வனைக் காணக் கிடைக்கவில்லையே, காதல் மோகம் தலைக்கேறி விட்டதோ?" என்று ராஜுவைக் கேட்டேன்.

"அப்படி இருந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையே, அவனொரு வாலிபன்" என்று முகத்திலறைந்தாற்போல் பதில் கூறினன். நான் மேற்கொண்டு கதையை வளர்க்காமல் சம்பாஷணையை வேறு பக்கத்துக்குத் திருப்பினேன்.

உண்மையில் செல்வனின் கண்களுக்குப் புற உலகம் மறைந்துவிட்டது. எப்போதாவது தப்பித்தவறி என்னைச்சந்தித்தால் "ஹலோ" என்ற ஒரு சொல்லை என் முன்னல் வீசிவிட்டு வேகமாய்ச் சென்று விடுவான். பொழுது போக்குக்காக நான் அடிக்கடி அவன் அறைக்குச் செல்வது வழக்கம். இப்பொழுதெல்லாம் அவனை அறையில் காண்பது அரிது. ராஜு மட்டும் ஏதாவதொரு புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஏகாங்கியாய் இருப்பான்.

செல்வன் தான் அழகனென்று எண்ணிக்கொண்டிருந்தான். அவன் உலக வாலிபர்களோடு தன்னை ஒப்பிட்டுப்பார்க்கவில்லை. ஒரே அறையில் ஒன்ருக வசிக்கும் தன் நண்பன் ராஜுவோடு தான் தன்னை ஒப்பிட்டுப் பார்ப்பான். ஒப்பிட்டுப் பார்க்க முற்படுபவர்களிடம் ஏதாவதொரு குறையிருந்தால்தானே, அவர்களிடம் அவ்வித உணர்ச்சித்தூண்டல் இருந்து கொண்டிருக்கும். செல்வன் உயரத்தில் மிக மட்டமானவன். ராஜுவின் ஆஜானுபாகுவான தோற்றத்தில் அவனுக்கு மறைமுகக்காதல். ஆனல் ராஜுவைக்காட்டிலும் செல்வன் வசீகரமான தோற்றமுள்ளவனென்பதை எந்த ஆணும் ஒப்புக்கொள்ளுவான். ஆணை மட்டும் நான் குறிப்பிடுவதற்குக் காரணமிருக்கிறது. பெண்களின் ரசனை ஆண்களினதுக்கு முற்றிலும் மாறுபட்டதல்லவா?

பெண்பார்க்கும் படலம் ஆரம்பிக்கும்போது, மணப் பெண் ஆண்மகனின் கண்களைத்தான் கவனிக்கிருளென்றும், பெண்ணின் தாய் அவனின் உடற்கட்டைத்தான் கவனிக்கிருளென்றும், பெண்ணின் தந்தை அவனது நடையுடைபாவனைகளையும் பொருளாதார நிலையையும் கவனிக்கிருரென்றும் தொன்று தொட்டு எண்ணப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையில் பார்த்தால் ராஜுவுக்கு சைபர்தான்.

செல்வனின் உலகமே அந்தப் பெண்ணுய் விட்டது. ஒரு நாள் அவளைப் பார்க்காவிட்டால் உலகமே அஸ்தமித்ததுபோலத்தான். அன்ெருருநாள் அவன் குதூகலத்தோடு கூறினுன் "அவளையும் அவள் பெற்ருேரையும் இன்று சினிமாவுக்கு அழைத்துப் போகிறேன்" என்று.

"ஓ, இன்று மூதல் தேதியல்லவா? சாப்பாட்டுக்கடைக் கணக்கையும், வீட்டு வாடகையையும் கொடுத்துவிட்டு மிகுதியிருந்தால் கொண்டுபோ, சம்பளத்தை அப்படியே கொண்டுபோய்ச் செலவுசெய்துவிட்டு மறுபடி வானத்தை அண்ணுர்ந்து பார்க்காதே" என்ருன் ராஜு சிரித்துக்கொண்டே.

"அவளையென்ன 'பிடுங்கி' என்று எண்ணிக்கொண்டாயா? செல்வனின் இந்த வசனம் கொஞ்சம் காரமாய்த்தான் தொனித்தது.

"அவளைப்பற்றி அபிப்பிராயம் கூற எனக்கென்னடா தெரியும். ஒரு நாள் பார்த்ததுதானே. அல்லாமலும் உன்னைத்தான் சொல்லுகிறேன் செலவு செய்யாதேயென்று, அவளிடம் கொடுத்துவிடாதே யென்று நான் கூறினேனு?"

இவர்கள் சம்பாஷணையை நான் கவனித்துக்கொண்டிருந்தேன். என் உள்ளம் நண்பர்கள் இருவரையும் எடைபோட்டுக் கொண்டிருந்தது.

மூன்று மாசங்களின்பின் ஒருநாள் நானும் ராஜுவும் சுவாரஸ்யமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது செல்வன் உள்ளே நுழைந்தான். அப்பொழுது இரவு சுமார் எட்டு மணியிருக்கும். "ஏது அபூர்வமாயிருக்கே!"

என்றேன். ராஜு சமிக்கை செய்ததும் வாயை அடக்கிக் கொண்டேன். செல்வனை உற்றுப்பார்த்தேன், அவன் முகம் வாட்டமடைந்து காணப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் நான் அப்படிக்கூறியது தப்பென்பதை உணர்ந்து கொண்டேன்.

உடைகளைக் கழைந்துவிட்டு செல்வன் உட்கார்ந்தான். அவன் அறைக்குள் வந்த நேரந் தொடக்கம் மரண அமைதி நிலவிக் கொண்டிருந்தது. வலிந்து ஒரு புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டு "என்ன, என்னைக் கண்டதும் பேச்சை நிறுத்தி விட்டீர்களே" என்றான் செல்வன்.

"நேரந்தான் எட்டு மணிக்கு மேலாய்விட்டதே, சாப்பிடப்போகலாமா?" என்றான் ராஜு எதைப்பற்றிப் பேசுவதென்று தெரியாமல்

"போகலாம், இன்னும் சிறிதுநேரத்தில். நாங்கள் மூவருமாய்ச்சேர்ந்து ஒரு முக்கியமான விஷயத்தைத் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது" என்று பீடிகையோடு ஆரம்பித்தான் செல்வன்.

நான் ராஜுவைத் திரும்பிப்பார்த்தேன். அவன் அமைதியோ அமைதியாய் உட்கார்ந்திருந்தான்.

செல்வன் ஆரம்பித்தான். "ராஜு, நான் அவள்மீது அக்கறைகொண்டது உண்மைதான். அதை ஆசையென்றோ, அன்பென்றோ, காதலென்றோ எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள். அவள் வேண்டுமானால் என் தொடர்பை எப்பொழுதோ அறுத்திருக்கலாம். ஆனால் அவள் அப்படிச் செய்ய வில்லை. என் நட்பை ஏற்றுக்கொண்டாள். இத்தனைகாலம் அவள்பின்னால் சுற்றியலைந்தேன். ஆனால், இன்றுதான் அவளோடு மனம்விட்டுப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. விவாகத்தைப்பற்றிய கதை ஆரம்பித்தபோதுதான் அவள் கவலையோடு கூறினாள்.

"நட்புரிமையோ கூறுகிறேன். நான் சொல்வது ஒரு வேளை உங்களுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணலாம். என்னை நீங்கள் முதல் சந்தித்தீர்களே அந்த நாளை என்னால் மறக்கமுடியாது.

என் வீட்டுக்கு என்னை நீங்கள் அழைத்துவரும்போது உங்களோடு கூட உங்கள் நண்பரும் வந்தாரல்லவா? அவர்மீது என் மனம் பதிந்துவிட்டது. ஏன், எப்படி? என்று தயவுசெய்து என்னைக்கேட்க வேண்டாம். உங்கள் நட்பு உண்மையானதானால் அவரை............"

"எதிர்பாராத அதிர்ச்சி என் இதயத்தைப் பலமாகத் தாக்கிவிட்டது. ஆனாலும் நான் சமாளித்துக்கொண்டேன். அவள் இன்னொருவனைக் கூறாமல் உன்னைக் கூறினாளே, அதிலே ஒரு சிறு திருப்தி எனக்கேற்பட்டது..........."

செல்வன் பேசிமுடிந்ததும் அவன் சாதுர்யமான பேச்சைப்பற்றிச் சிறிது நேரம் சிந்தித்தேன். வெள்ளையுள்ளம் படைத்த ராஜுவை ஆபத்தில் மாட்டிவைக்கவே செல்வன் சதி செய்கிறானென்று என் இதயம் அலறியது. ராஜுவை நிமிர்ந்து பார்த்தேன். அவன் ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறானென்பதை அவன் முகம் படம்பிடித்துக் காட்டியது. நான் கூறினேன்: "செல்வா, உங்கள் விஷயத்தில் நான் தலையிடுகிறேனென்று கோபங்கொள்ளாதே. ராஜுவின் வாழ்க்கை சீரழிந்து போகக் கூடாதேயென்ற ஒரே நோக்கோடுதான் நான் பேசுகிறேன். நாலு மாசக்காலம் நீ அவளோடு சுற்றி அலைந்திருக்கிறாய். இப்பொழுது அவள் ராஜுவை விரும்புவதாகக் கூறுகிறாய். பட்டின நாகரிகமர்ம விளையாட்டுக்களில் இதுவும் ஒன்றாயிருக்குமோ என்று நான் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. நீ கூறுவதையெல்லாம் அப்படியே நம்பிவிடும் உன் அப்பாவி நண்பனுக்குத் துரோகம் செய்துவிடாதே"

"ராஜு, நீயும் இப்படித்தான் எண்ணுகிறாயா? அவளுக்கு நான் வாக்களித்துவிட்டேன், நான் சொல்வதை நீ தட்டமாட்டாய் என்ற நம்பிக்கையில். ஒரு தங்கையின் விவாகத்தில் அக்கறை செலுத்தும் ஒரு அண்ணனைப் போலத்தான் நான் இன்று பேசுகிறேன். என்னை நம்பமாட்டாயா ராஜு?" என்றான் செல்வன். அவன் கண்கள் மன்றாடின.

"செல்வா, என்னை நான் என்றாவது சந்தேகித்திருக்கிறேனா? ஆனால்...... நான் இப்பொழுது மணம் செய்யக்கூடிய நிலையிலிருக்கிறேனா? அதை நீ சிந்தித்துப் பார்க்கவில்லையே"

"வருமானத்தைப் பற்றித்தானே குறிப்பிடுகிறாய். அதை நான் சிந்திக்காமலில்லை. அவள் ஒரு கம்பெனியில் சுருக்கெழுத்து வேலையிலிருக்கிறாள். மாசம் இருநூறு ரூபா வரையில் சம்பளம் கிடைக்கிறது. உனக்கு உத்தியோக உயர்வு கிடைத்து வருமானம் உயர்ந்தபின் வேண்டுமானால் அவளை வேலைக்குப்போக விடாமல் நிறுத்திக்கொள்ளலாம்"

"நான் இப்பொழுது விவாகம் செய்யக்கூடிய நிலையில் இல்லையென்பதற்குப்பல காரணங்களிருக்கின்றன. ஆனால்........ அவைகளெல்லாம் நொண்டிச்சாக்காகத்தான் தோன்றும். உன் மீது எனக்கு நம்பிக்கையிருக்கிறதென்பதை நிரூபிப்பதற்காகவே நான் சம்மதிக்கிறேன்"

"என்ன! சம்மதிக்கிறாயா? இதில் ஏதோ சூழ்ச்சியிருக்கிறது. கடைசி ஒரு வருடத்துக்காவது உன் விவாகத்தைத்தள்ளிப்போடு. அவசரப்பட்டு ஆபத்தில் மாட்டிக்கொள்ளாதே" என்று கத்தினேன் ஆத்திரத்தோடு.

"உன் மீது எனக்கு வெறுப்போ, கோபமோ ஒரு பொழுதுமேற்படாது. ஜராமேல் நீ கொண்டிருக்கும் அன்பையும், அக்கறையையுந்தான் உன் வாதம் மிகைப்படுத்திக் காட்டுகிறது. அதற்காக நான் உண்மையில் சந்தோஷமடைகிறேன்" என்றான் செல்வன் என்னை நோக்கி. நான் ராஜாவைத் திரும்பிப்பார்த்தேன். அவன் புன்சிரிப்போடு கூறினான்.

"யாராயிருந்தாலும், எங்கள் நட்பின் தரத்தைக் குறைத்து மதிப்பிட நான் காரணமாயிருக்கமாட்டேன். செல்வன் அவளுக்கு வாக்களித்துவிட்டதாகக் கூறுகிறான். மறுபடி அவளிடம் போய், என் நண்பன் என்னைச் சந்தேகிக்கிறான் என்று எப்படிக் கூற முடியும்? அவள்கூட எங்கள் நட்பைக்குறைத்து மதிப்பிடக்கூடாது என்பதுதான்

என் ஆசை" ராஜு சாதாரணமாய்த்தான் பேசினான். ஆனால் செல்வனின் கண்களில் உணர்ச்சி மிகுதியால் நீர் துளித்தது.

ராஜு அவளை மணந்து கொண்டது மட்டுமல்ல, தன் வீட்டின் முன் அறையைச் செல்வனுக்கு ஒதுக்கியும் கொடுத்திருந்தான். சலனமற்று அவர்கள் காலம் கழிந்துகொண்டிருந்தது. நான் அடிக்கடி அவர்கள் வீட்டுக்குப் போய் வருவதுண்டு. விவாகம் செய்த பின்பும் செல்வனைத் தன் வீட்டிலேயே வைத்திருக்கும் ராஜுவின் அறியாமையை நினைந்து என் உள்ளம் அழுதது.

செல்வனின் காரியாலயமும், அவளின் காரியாலயமும் அருகருகேயிருந்தன. ராஜுவின் காரியாலயம் மறு துருவத்திலிருந்தது. செல்வனிடம் மோட்டாரிருக்கும்போது அவளேன் பஸ்ஸில் போகவேண்டும்? செல்வனும் திருமதி ராஜுவும் மோட்டாரிலேயே காரியாலயத்துக்குப் போய்வந்தனர்.

ராஜுவின் அப்பாவித்தனத்தை அனுதாபத்தோடு கவனித்துவந்தேன். செல்வனும் அவளும் நேர்மையாகத்தான் பழகுகிறார்களென்றாலும் உலக வாய்க்கு ஓரளவு பயப்படத்தானே வேண்டும். ஆனால் ராஜு ஒன்றையுமே பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. தன்பாட்டுக்கு அவன் கவலையற்று நடமாடிக்கொண்டிருந்தான்.

செல்வனையோ அவளையோ சந்தேகிப்பதற்கு என் மனச்சாட்சி இப்பொழுது இடந்தரவில்லை அவர்களது மூன்று வருட கால மணவாழ்க்கையை நான் முதலிலிருந்து கவனித்து வந்திருக்கிறேன். கணவன்மேல் அவள் செலுத்திவரும் அன்புக்கும் அக்கறைக்கும் இணையாக இன்னொரு பெண்ணைக்கூற முடியாது. ராஜுவின் உணவிலிருந்து உடை வரையில் அவள் நுணுக்கமாக ஆராய்ந்து அக்கறை செலுத்தினாள். செல்வனை அவள் அண்ணா என்றே அழைத்தாள். செல்வனும் உடன் பிறந்த தங்கை போலவே அவளை நடத்தி வந்தான். ஆனாலும் என்ன செய்வது, உலகத்துக்குத்

தான் கண்ணை மூடிக்கொண்டு சும்மா இருக்கத் தெரியாதே. உடன் பிறவாதவளைத் தங்கையென்றால் உலகம் ஏற்றுக்கொள்ளுமா?

இனிமை நிறைந்த தாம்பத்ய வாழ்வு அவளுக்குத் தெவிட்டவில்லையென்று தான் நம்பினேன். ஆனால் அவள் முகத்தில் எப்பொழுதும் ஏதோ ஒருவித தாப உணர்ச்சி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. கண்களில் விரக்தி. ஏதோ ஒன்றைப் பறிகொடுத்தவள் போல் அடிக்கடி உட்கார்ந்து ஏங்குவாள்.

நல்லவன்தான் ராஜு. ஆனால் அவள் குறையை நாசுக்காய் அறியுந்தன்மை அவனிடமில்லை. பூரண சுதந்திரம் கொடுத்துவிட்டால்மட்டும் ஒரு பெண் சந்தோஷமாய் வாழுவாளென்பது அவன் எண்ணம் போலும். பெருந்தன்மையால் மட்டும் சாதிக்கமுடியாத ஒரு பெருங்கலை இதுவென்பதை அறியாதவனவன். அழகன் செல்வனை விட்டுவிட்டுத் தன்னை ஏன் அவள் விரும்பினாள் என்பதையாவது சிறிது சிந்தித்துப்பார்த்திருந்தால், இக்கலையின் முதலத்தியாயம் அவனுக்குப் புரிந்திருக்கும். மறைக்கப்பட்ட ஒன்றைப் பார்ப்பதற்கு மனம் ஆவல் கொள்ளுவது போல், பின்னால் சுற்றியலையும் ஒருவனைக் காட்டிலும் தன்னை அலட்சியப்படுத்தும் ஒருவன்மேல் ஒருத்திக்கு ஆசை விழலாமல்லவா?

அன்றொருநாள் அவளோடு தனிமையில் பேசும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. வேறு துறையில் ஆரம்பித்த எங்கள் சம்பாஷணை அவள் சொந்த வாழ்க்கையில் திரும்பியது. அவள் கூறினாள்; 'வாழ்க்கை என்னவோ சப்பென்றிருக்கிறது. அது பாவம், யந்திரம்போல் உத்தியோகம் பார்க்கிறது. உழைப்பதை அப்படியே கொண்டுவந்து என்னிடம் தந்துவிடும். தன் சொந்தச்செலவுக்கென்று ஒரு செம்புக்காசும் எடுக்காது. பஸ்ஸுக்குக்கூடத் தினசரி நான்தான் பணம் கொடுக்கவேண்டும். நான் எது கூறினாலும் 'சரி, சரி' என்று தலையசைக்கும். எதிர்த்துப்பேசி அதற்குப் பழக்கமில்லை........'' அவள் கூறிவிட்டுக் கலகலவென்று சிரித்தாள். 'அவன் நல்ல

தனம் நாசமாய்ப்போகட்டும்' என்று சபித்துக்கொண்டே எழுந்து சென்றேன்.

சேகரன் ராஜூவின் ஆபீஸ் நண்பன். அவனை எனக்குத்தெரியும். அவன் விவாகத்துக்குப் போக வேண்டுமென்று ராஜூ டெலிபோனில் தெரிவித்திருந்தான். மாலை சரியாக ஐந்தரை மணிக்கு ராஜூவிடம்போனேன். அவன் நன்றாக உடையணிந்து கொண்டு அங்குமிங்கும் நடைபழகிக்கொண்டிருந்தான் "என்னடா விழிக்கிறாய்' என்று கேட்டேன். அவன் கலவரத்தோடு கூறினான்! "மணமான ஒருவன் மனைவியை விட்டுவிட்டுப் போவது நன்றாயிருக்குமா? அதுவும் சேகரன் எனக்கு வேண்டியவன், மனைவியோடு வர வேண்டுமென்று வேண்டிக் கொண்டான்......"

"அவளுக்கு விஷயந்தெரியாதோ?"

"தெரியாமலென்ன, 'ஷார்ட் லீவ்' எடுத்துக் கொண்டு மூன்று மணிக்கே வரவேண்டுமென்று வேறு சொல்லியனுப்பினேன்"

நான் ஒன்றுமே கூறவில்லை. அருகேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டேன். நேரம் ஆறு மணியாய்விட்டது. "சாதாரண நாட்களில் ஐந்து மணிக்கே வந்துவிடுவாள். இன்று ஆறு மணியாகியும் வரவில்லை........போகட்டும் இனிமேலும் தாமதிக்கமுடியாது. வா, நாங்கள் போவோம்" என்று ராஜூ சாதாரணமாய்க் கூறுவது போலத் தான் கூறினான். ஆனால் அவன் உள்ளக்கொந்தளிப்பு முகத்தில் பிரதிபலித்தது.

சேகரன் எங்களை அன்பாக வரவேற்றான். மனைவியைக் கூட்டிவராததற்காக ராஜூவைக் கடிந்துகொண்டான். அப்பொழுது பக்கத்திலிருந்த ஒரு வாயாடி "வீட்டைக்காவல் காக்கத் தான் செல்வனிருக்கிறான். அவனைக் காவல்காக்க ஒருவரும் வேண்டாமா?" என்று கூறிச் சிரித்தான். சேகரன் அவனை முறைத்துப்பார்த்தான். ராஜூவின் முகத்தைக் கொஞ்சங்கொஞ்சமாகக் கிரகணம் கௌவியது.

நாங்கள் வீட்டையடையும் போது இரவு சுமார் ஒன்

பது மணியிருக்கும். எங்களைக் கண்டதும் அவள் ராஜுவிடம் வந்து "என்னை மன்னியுங்கள். லீவு எடுக்காமலே கொஞ்சம் வேகமாய் வந்தால் ஐந்து மணிக்குள் வந்துவிடலாமென்று செல்வன் கூறினர். கஷ்ட காலம், வரும்போது வழியில் 'டயர்' வெடித்துவிட்டது." என்று மன்றாட்டமாகக் கூறினள்.

"டயர் வெடித்தால் பஸ்ஸில் வந்திருக்கலாம்............ அல்லது வாடகை மோட்டாரில் வந்திருக்கலாம்...... அவ்வளவு அலட்சியம் உனக்கு... என்னை என்ன கையாலாகாதகபோதியென்றெண்ணி விட்டாயா........" இடி முழக்கம்போல அவன் கத்தினன். வீடே அதிர்ந்தது.

காற்றிலசைந்தாடும் மாந்துளிர்போல் அவளுடல் பயத்தால் நடுங்கியது. தன் அறையிலிருந்து செல்வனும் வெளியே வந்தான் நானும் ருத்திரன்போல் காட்சியளிக்கும் ராஜுவையே பார்த்துக் கொண்டு நின்றேன். எங்களெல்லோருக்குமே இது புது அனுபவம்.

"இல்லை...... நான் உங்களை ஒருபோதும் அலட்சியப் படுத்தியதில்லை........ செல்வன்........" கூறிக்கொண்டிருக்கும்போதே அவள் கன்னத்தில் அறை வீழ்ந்தது, "செல்வனைப்பற்றி யார் கேட்டார்கள்........ நீ வராததற்குத்தான் நான் காரணம் கேட்கிறேன்......"

அவள் துடித்துப்போய்க் கீழே வீழ்ந்தாள். செல்வன் விடுவிடென்று தன் அறைக்குள் சென்று விட்டான். நான் ராஜுவையும் அவனையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு நின்றேன். அவன் நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்து, கைகளால் முகத்தை மூடிக்கொண்டு விக்கி விக்கி அழுதான். அவள் தள்ளாடியபடியே மெல்ல எழுந்து அவன் அருகில் சென்று "இனிமேல் நான் இப்படிப்பிழை செய்யமாட்டேன்........ என்னை மன்னித்து விடுங்கள்" என்று கூறியபடியே அவனது அடித்த கரத்தை எடுத்து முத்தமிட்டாள். அவள் முகத்தில் என்றுமில்லாப் பொலிவு காணப்பட்டது. இதுவரை இருந்துவந்த குறை தீர்ந்து விட்டதோ என்னவோ?

*புதுமைப் பித்தன் இறந்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. எழுத்தாளர்களின் எழுத்தாளனான அவரது நினைவிற்காக இக்கட்டுரையை வெளியிடுகின்றோம்.*

*கட்டுரையாசிரியர் சோமு பொலீஸ் தலைமைக் காரியாலயத்தில் வேலை பார்க்கின்றார். 'உதயம்' ஆசிரியர் குழுவில் இடம்பெற்றவர் 'கலைச்செல்வி'க்காக அயராது உழைப்பவர்.*

# புதுமைப் பித்தன்

ஈழத்துச் சோமு

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய உலகம் இரண்டு பெரிய புரட்சிகளைக் கண்டிருக்கிறது. முதலாவது புரட்சி என்னவென்றால், பண்டிதர்களுக்கும் படித்தவர்களுக்கும் மட்டுமே உபயோகமாகி வந்த கவிதைகள் தளை உடைக்கப்பட்டு ஏனைய சாதாரண மக்களும் பயன்படுத்திக்கொள்ளக் கூடியதாக மாறின. தெய்வத்தின் பெருமைகளையும், மன்னர்களது மகத்துவத்தையும், அரசர்களது அந்தரங்க அந்தப்புர லீலைகளையும் பழைய இலக்கியங்களில் பரக்கக் காணலாம். இவையெல்லாவற்றையும் விட்டுவிட்டு, புது வழியில், சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில், மக்கள் பிரச்சனையை முன் வைத்து, புரட்சிப் பாணியில் கவிதைகள் அமைத்தவர் சுப்பிரமணிய பாரதியார் அவர்களேயாகும். அவர் கவிதைகளில் இன்றைய மக்களுக்குத் தேவையான இனவெழுச்சியும், விடுதலையார்வமும், புதுமை எண்ணங்களும், சீர்திருத்த-முற்போக்குக் கருத்துக்களும் நிரம்பியுள்ளன. பழைய பாரம்பரியத்தில் பன்னெடுங்காலமாகச் சென்று கொண்டிருந்த தமிழ் இலக்கிய உலகத்துக்கு, பாரதியாரது புது முயற்சி ஒரு புரட்சி தானே?

கவிதைத் துறையில் பாரதியார் புரட்சி ஒன்றை ஏற்படுத்தினார். ஆனால் சிறுகதைத் துறையில் புதுப் பாணியை யமைத்து, புதி

தான அந்தத் துறைக்குப் புது வேகத்தை உண்டாக்கியவர் புதுமைப்பித்தனுகும். தமிழ் இலக்கியத்துக்கு சிறுகதை யென்னும் துறை புதியது. புதிதான அந்தத்துறை கடந்த நூற்ருண்டு மக்களிடம் நிலவியபோது-அக்கதைகளில் மந்திரவாதிகளேயும், மாயக்காட்சிகளேயும், பணக்கார வீட்டுப் பெண்களின் காதலேயும், அமானுஷ்யமான நிகழ்ச்சிகளேயுந்தான் காணக் கூடியதாக இருந்தது, பேஞ பிடித்த எழுத்தாளர்களெல்லாம் காதலிலும், காதற் கடிதங்களிலும், கண்ணீர்ச் சொட்டிலும் தங்கள் கற்பனேக் குதிரையைத் தட்டிவிட்டார்கள். வெறும் பொழுது போக்கு இலக்கியங்களாக அவை காட்சியளித்தன. அதேநேரத்தில் புதுமை புரளும் பாணியில் மேஞட்டுச் சிறுகதைகள் வெளிவந்தன. அவற்றைக் கண்ட தமிழகக் கதைப் பிரியர்கள் தங்கள் கதைகளில் புதுமையில்லேயே என்ற சலிப்பால், அந்நியச் சிறுகதைகள்மேல் கவனஞ் செலுத்தத் தொடங்கினுர்கள். அவ்வேளேயில் தமிழிற் புதுமை சொட்டும் கதை தீட்ட நெஞ்சத் துணிவுடன் பேஞ தூக்கியவர் புதுமைப்பித்தனே. இலட்சிய வேகத்தில் எழுதிக் குவித்தார். தன் இதயத்தில்-புதிய சாதனேயில் அவர் பூரண வெற்றியடைந்தார் என்றே கூற வேண்டும். ஏனெனில் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் தரம் ஓரளவு மேஞட்டுச் சிறுகதை இலக்கியத்தின் தரத்தை எட்டிவிட்டது. "மணிக்கொடி"யில் மலர்ந்த அவர் புதுமை எழுத்துக்கள் தமிழ் வாசக உலகைப் புதுமணம் பரப்பிக் கவர்ந்தன. ஆகவே, கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள, தமிழ் இலக்கிய உலகின் இரண்டாவது புரட்சியாக இதைக்கொள்ளலாந் தானே?

அவர் கதைகளில் மக்களின் அன்ருடப் பிரச்சனேகள், வாழ்க்கையின் ஒளிவு நெளிவுகள், ஒளிர்விடும். நாம் அவர் கதைகளே வாசித்து முடிந்ததும், அவற்றில்வரும்கதாபாத்திரங்களே, நம்முடைய தினசரி வாழ்க்கையில் அடிக்கடி சந்திக்கலாம். ஆம். அன்ருட நிஜ வாழ்க்கையுடன் ஒட்டி இரண்டறக் கலந்து நிற்கும் நிகழ்ச்சிகளே வைத்தே அவர் கதைகள் உருளும். அறியாமைக்கு ஆப்பு வைப்பதில், மூட நம்பிக்கைகளே மூல வேருடன் கிண்டி எறிவதில், போலித் திரைகளால் மூடி மறைக்கப்படும் பொள்ளல்களேக் கிழித்துக் காட்டுவதில், நச்சுவாடை வீசும் சமுதாயத்

தின் புண்களைக் கிளறுவதில், அவர் ஓர் அசகாய சூரன். சமுதாயத்தின் தலையை உயர்த்துவதில் அவர் கதைகளுக்குப் பெரும் பங்கு உண்டு எனலாம்.

இரவு பகலாகச் சிந்தித்து முடிவில் "நல்ல நிலா, குழு குழு என வீசும் தென்றல்......" என்று எல்லாம் சினிமாக்களில் வரும் சொப்பனக் காட்சிகளைப்போல காதற் கதைகளைக் கற்பனை செய்த தமிழ் எழுத்தாளர்களுக்கு நேர் விரோதமாகப் புதுமைப்பித்தன் தன் கதைகளைச் சிருட்டித்தார். நீல நிற வானும், பால் பொழியும் நிலவும், பறந்து வரும் தென்றலும் பூமணம் பரப்புஞ் சோலைகளும், தங்க விக்கிரகம் போன்ற பெண்களும் தான் காதல் செய்யத் தகுதியானவைகள் என்ற தப்பான எண்ணத்தைப் போக்கடித்து, முன்னோடியாகத் தன் கதாபாத்திரங்களை அமாவாசை இருளிலும், அந்தகார வேளையிலும் உலாவவிட்டார். காதல் செய்ய அனுப்பினார்! அவரே சொல்கின்றார்:- என்னுடைய கதைகளில் நிலவு கிடையாது. தென்றல் கிடையாது. என்னுடைய சென்பகராமன் ("சித்தி" கதையில் வரும் பாத்திரம்) இருட்டிலே போனார்; இருட்டிலே வந்தார்."

ஆகா! என்ன ஜீவத் துடிப்பான நிஜச் சிருட்டி! இன்னும், அவர் கதையில் வரும் "அம்மாளு" கட்டிய கணவனுக்குப் பால் வார்க்கக் கற்பைப் பலியிடுகிறாள்! "விபசாரம் செய்து வயிற்றுப் பசியைப் போக்குவேன். பிச்சை யெடுத்து வயிறு வளர்க்க மாட்டேன்." என்று வேறு கர்ஜனை புரிகிறாள் அவள்! ஆச்சரியமாயிருக்கிறதா? ஆம். சமுதாய ஏற்றத்தாழ்வுகளை, மேடுபள்ளங்களைச் சுட்டிக் காட்டுகிறார் புதுமைப்பித்தன். வறுமையின் கோரப் பிடியிலே சிக்கித்தவிக்கும் ஒரு குடும்பம். தலைவன் இயலாத நிலையில் படுக்கையிலே கிடக்கிறான் அவனுக்குக் கஞ்சி ...? அதைத்தான் தேடுவதற்கு அவள் போகிறாள். அதோ!...... "பொன்னகரம்." (அதுவும் அவர் அமர சிருட்டிகளில் ஒன்று) "இருவரும் இருளில் மறைகிறார்கள் ... அம்மாளு முக்கால் ரூபா சம்பாதித்துவிட்டாள். ஆம். தன் புருஷனுக்குப் பால் வார்க்கத்தான்!" சீ! மானங்கெட்டவள். இதுவா பிழைப்பு? புதுமைப்பித்தன் இப்படி எழுதலாமா? என்று கேட்கலாம். ஆனால் இலட்சியம் என்ன இன்று எழுத்தாளர்களின் ஏட்டளவில்தானே நிற்கிறது?

அவளே சொல்லுகிருள்:- "என்னவோ கற்பு கற்பு என்று கதைக்கிறீர்களே ... இதுதான் ஐயா பொன்னகரம்!"

சீர்கெட்ட சமுதாயத்தைச் சிந்திக்கச் செய்யும் படிப்பிணை.

புதுமைப்பித்தன் உள்ளதை உள்ளபடி எழுத எவருக்கும் பயப்படவில்லை.

புதுமைப்பித்தனின் இன்ெனுரு "சிருட்டியான கவந்தனும் காமனும்" கதையில் வரும் அந்தப் பெண்—ஆம் அவளை அவர் அறிமுகப் படுத்துகிருர்—சமுதாயத்திலிருந்து இன்னும் முற்ருக ஒழிக்கப்படாத விஷப்பூண்டாக இருக்கும் விபசாரத்துக்கு ஒரு நல்ல உதாரணம்.

"அலங்கோலமான ஸ்திதியில் ஒரு பெண். பதினுறு பதினேழு வயதிருக்கும். காலணு அகலம் குங்குமப் பொட்டு. மல்லிகைப் பூ. இன்னும் விளம்பரத்துக்குரிய சரக்குகள்" ஐயோ பாவம்! அவள் வீதியிலே போய்க் கொண்டிருந்த அப்பாவி வாலிபனை வலிந்து இழுக்கிருள். அவன் பிச்சைக்காரி என எண்ணி சில்றறைச் சதங்களை வீசிவிட்டு ஓடுகிருன்! "ஏண்டா பேடிப்பயலே! பிச்சைக்காரின்னு நெனச்சுக் கிறே?" அவள் இப்படிக் கேட்கிருள்! எப்படிச் சமுதாயம்?

மற்றும் அவரது சிருஷ்டிகளான "சிற்பியின் நாகம், திறந்த ஜன்னல், வாழ்க்கை, ஞானக்குகை, தெருவிளக்கு, அகல்யை, காலனும்கிழவியும், துன்பக்கேணி கலியாணி, கட்டில் பேசுகிறது, கடிதம். கனவுப் பெண், சங்குத் தேவனின் தர்மம். கொன்ற சிரிப்பு, கோபாலபுரம், சாயங்கால மயக்கம், கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும், மனக்குகை முதலிய இருநூற்றுக்கு மேற்பட்ட கதைகளும் அற்புதமானவைகளாகும். பல்வேறு உண்மைகளை அவை இயம்புகின்றன.

கபாடபுரம், சித்தி, காஞ்சனை என்னும் நீண்ட கதைகளையும் அவர் சிருட்டித்துள்ளார். பல மேனுட்டுச் சிறு கதைகளையும் அவர் மொழிபெயர்த்திருக்கிருர், எழுத்தாளர் மட்டுமல்ல, அவர் ஒரு கவிஞனுங்கூட. வேளூர் வே. கந்தசாமிக் கவிராயர் என்ற புனை பெயரில் பல கவிதைகளையும் புனைந்துள்ளார். சினிமா உலகிலும் புகுந்து "ராஜமுக்தி" "காமவல்லி" படங்களுக்குத் திரைக் கதை வசனம் எழுதியிருக்கிருர்.

அவர் படைப்புகள் அமர சிருட்டிகள். முலாம் பூசப் பெற்ற போலி நகைகளல்ல, உரைக்க உரைக்க மாற்று ஏறும் மாசற்ற தங்கக் கட்டிகள் புதுமைப் பித்தனின் சிறு கதைகள். புதுமைப்பித்தன் கதைகள் அசுரப் பிறவிகள். ஏன் அவர் மொழியிலேயே கூற வேண்டுமானால் அவைகள் "காலத்தால் சாகா, காலத்தின் ஏலத்தால் மலியா" தன்மை வாய்ந்தவைகள் என்று தான் கூறலாம்.

சொ. விருத்தாசலம் என்பதே "புதுமைப் பித்தனின் சொந்தப் பெயர். ஆனால் சொ. விருத்தாசலம் என்றால் இன்று பலருக்கும் தெரியாது. 'புதுமைப் பித்தன்' என்ற புனைபெயர் அவ்வளவு தூரம் பிரபல்லியமடைந்து சொந்தப் பெயரையே மறந்துவிடச் செய்தது. இன்னும் அவர் பல புனைபெயர்களில் எழுதியுள்ளார். என்றாலும் 'புதுமைப்பித்தன் என்ற பெயர் தமிழ்நாட்டு மக்களது எண்ணத்தில் என்றும் நின்று நடம் புரிவதுபோல ஏனையவை நிலைக்கவில்லை.

சொ. விருத்தாசலம் என்னும் 'புதுமைப் பித்தன்' அதிகநாள் வாழ்ந்திருக்கவில்லை. வாழ்க்கையில் வறுமையும் நோய்க்கொடுமையும் அவரைவருத்தின. பட்டதாரியானாலும், துர் அதிர்ஷ்டம் பிடித்திருந்த தமிழ் நாட்டில், எழுத்துலகில் புரட்சியுண்டு பண்ண வேண்டும் என்ற இதயதாகத்தில் பேனாதூக்கியதால், கட்டிய இளம் மனையாளுடன் காலம் பூராவும் வறுமை முதலிய கஷ்டங்களால் கலங்கினார். கலங்கியும் தன் இலட்சியத்தை விடவில்லை. காசநோய், கருத்துக்குவியலைக் கன்னித் தமிழுக்களித்த புதுமைப்பித்தனை பிடித்தது. பிற்காலம் முழுவதும் நோயிலேயே கழிந்தது. கடைசியில் 1948-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி 'புதுமைப் பித்தன்' என்ற சிறுகதை இலக்கியதாரகை மறைந்தது. 'புதுமைப் பித்தன்' வாழ்வு, பேனா ஓட்டி வாழலாம் என்ற எண்ணங் கொண்ட தமிழ் எழுத்தாளர்களுக்கு ஒரு நல்ல பாடம். பட்டினியுடன் பாரதியைச் சாகடித்த சமுதாயம் புதுமைப் பித்தனையும் அப்படியே செய்தது.

★ ★ ★

# காளி தரிசனம்!

"நாவேந்தன்"

(யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர். கதைகள் அரசியற் கட்டுரைகள் ஆகியவற்றுடன் இப்போது கவிதைகளும் எழுதி வருகின்றார். மெமோரியல் பாடசாலை ஆசிரியர்.)

1. அன்றொரு நாள் நள்ளிரவு ஊருறங்கும் நேரம்
அறையினிலே தனியாகப் படுத்திருந்த போது
என்னருகே வந்து நின்ற பேருருவங் கண்டேன்
எழுதவொணுப் பயங்கரத்திற் கிலக்காகி விட்டேன்
கொன்றுவிடுங் கொடும்பார்வை அனல் சிந்தும் விழிகள்
கோரைப்பல், குகைவாயாள் கூந்தல் பனைக்காடு
"சென்று விடு அம்மா நான் பயந்து துடிக்கின்றேன்"
செல்லவில்லை, அவள் சிரித்தாள் சித்த நடுக்குற்றேன்!

2. ஒன்றிரண்டு நிமிடங்கள் ஓடிய பின் னன்னுள்
ஓகோ வென்றிரைந்திட்டாள் ஓலமிட்டு விட்டேன்
"நன்று செய்தா யென்மகனே! நானென்ன பேயா?
நலஞ் செயவே வந்துற்றேன்; அஞ்சலை நீ" என்றாள்
"கொன்றுவிடு என்னாலே தாங்கவில்லை" என்றேன்
கொல்வாளோ குழந்தையைத் தா"யென்று நகை செய்தாள்
அன்புடனே பார்த்திட்டாள்; அச்சமெலாம் போச்சு
"அம்மா! நீ யா ரென்றே யறைந்திடு வா"யென்ன!

3. "தண்ணளி சேர் தாயென்றே அனைத்துலகும் புகழும்
தருமத்தின் வடிவம் நான் அன்னை பராசக்தி
மண்ணினிலே தீமையெலாம் முன்னின்று மாய்க்கும்
வடிவம் நான் கொடுமைகளை மாகாளித் தேவி
கண்களிலே கனலுமிழக் காய்ந்திடுவேன் தீயோர்
கதறிடுவார், நல்லவரைக் காத்து நலம்புரிவேன்
நண்ணு பல தோற்றத்தும் நானுள்ளே"னென்றாள்
நாயகியாள் பாதமலர் நானிறைஞ்சி நின்றேன்!

4. 'வாழி ஜகன் மாதாவுன் வண்ணவுருக் காண
வாஞ்சை மிகக் கொண்டேனுன்வருக வென்றேயிசைப்பன்'
ஊழி நடம்புரிந்திடுவா ளுருமாறி விட்டாள்
ஒளி வெள்ளம், ஒளி வெள்ளம் உமையவளைக் கண்டேன்
ஆழி அலைமோதி வரு பொன்சிரிப்புக் கண்டேன்
அழகெல்லாம் ஒருருவாய் அவளிலங்கக் கண்டேன்
தோழியவளாகி விட்டாள் துயரெல்லாம் விட்டேன்
தோல்வியிலை வெற்றி யெலாம் என்று நவின்றிட்டாள்!

5. "பாடுக நீ பைந்தமிழிற் கன்னலெனும் பாக்கள்
பரவுக இப் பூவுலகிற் தெய்வ அருட் காந்தி
கேடு தரு தீ நெறியின் பாசவலை நீங்கிக்
கேளிரென வாழ்ந்திடுக மக்கள் குலமெல்லாம்
பீடு நடை போட்டுலக வாழ்வு பெரி தென்னப்
பேசிடுக இன்பநிலை பெற்று மிக வாழ்க
கூடுமென தன்பு அருள் நிச்சயம" தென்றே
கூறி மறைந்திட்டனளே யன்னை பராசக்தி!

★ ★ ★


## 'கலைச்செல்வி' கிடைக்குமிடங்கள்.

1. த. தம்பித்துரை
226, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

2. தமிழ்ப் பண்ணை
கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

3. இந்திரபவன் மில்க்பார்
சுன்னுகம்

4. இன்ப நிலையம்
ஸ்டேசன் ரோட்
சுன்னுகம்.

5. V. கந்தையா
மூலைக்கடை
சுன்னுகம்.

6. சக்தி நூல் நிலையம்
மட்டக்களப்பு.

7. ஸ்கந்தா ரீ றூம்
கந்தரோடை.

8. என். முருகேசு
தேநீர் பலசரக்கு மாளிகை
மூளாய்.

9. கே. நடராசா
ஆஸ்பத்திரி வீதி
மானிப்பாய்.

10. கே. கே. ஐயாத்துரை
சாவகச்சேரி.

*ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை.*
***விபரங்களுக்கு உடனே எழுதுக.***

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# குற்றம் அறியுமா

★ ஆதவன் ★

பார்சலைப்பற்றிய நினைவோடு அவசரம் அவசரமாகச் சாப்பிட்டு முடித்துவிட்டு, பார்சலின் மேலுறையைப் பார்க்குமுன் அவள் மனதில் ஜோடித்த ஜோடினை நெஞ்சைப் பிய்த்துக்கொள்ள அவள் கரங்கள் உறையைப் பிய்த்தன.

"ஆம்; அப்பாவின் படம் எவ்வளவு அழகாகப் பெரிதாக இருக்கிறதே. இந்த வேலைக்கு அந்த 'மூன் ஸ்ருடியோ'வுக்கு மூன்று மாதத்திற்கு மேலும் பிடிக்கும்; முற்காசு கொடுத்ததால் இவ்வளவு கால எல்லைக்குள் அனுப்பிவிட்டார்கள்." என்று நினைத்தவளாய், தன் கண்ணாரக் காணாத தெய்வத்தின் பிரதிமையைக் கண்ணாரக்கண்டு ஒரு பெருமூச்சுடன் தலைவாசலின் சுவரில் மாட்டிக்கொண்டு நின்றாள். பக்கத்திலே வேலைக்காரி இலட்சுமி படலையை நோக்கியவளாய், "அம்மா! யாரோ வருகிறார்கள். 'ஸ்ருலை' விட்டு இறங்கம்மா; என்ன நினைப்பார்கள்?' என்றாள்.

---

*முகவரிகள் மாறிய உறைகளில் திணித்த கடிதங்கள், மூன்று உள்ளங்களில் மோதலை எழுப்பின. பெற்ற தாயுந் தந்தையும், காதலித்த காதலியும் பேதலித்தனர். நீலா மீது கொண்ட காதலால் தடுமாறிய சோதிநாதன் குற்றவாளியா? காரணளாகிய நீலா குற்றவாளியா?*

*இருவரும் குற்றவாளிகள் அல்லர். இவர்களுக்கு மேலாகத் தந்தை இழைத்த குற்றமே தாயர் வாழ்க்கைக்குக் குற்றமாதலை இந்தச் சிறுகதை கருப் பொருளாகக் கொண்டது.*

---

தூக்கிய படத்தின் சாய்வு சரிவுகளைக் கூடக் கவனிக்க அவகாசமில்லாமல் இறங்கினாள் நீலா. திரும்ப அந்தப் படத்தின் அழகைப் பார்க்க விடாமல், வேர்க்க வியர்க்க வந்துகொண்டிருந்த பெரியவர் பக்கம் நீலாவின் கண்கள் போய்விட்டன. அவள் கண்

களுக்கு அப்பொழுது முடிந்த வேலை அவ்வளவுதானே.

சுத்தியலுங் கையுமாக நின்ற பெண்ணைக் கண்டதும் பெரியவர் நிதானம் எங் கெங்கோ எல்லாம் அலைய ஆரம்பித்தது.

"இலட்சுமி! அம்மாவைக் கூட்டிவாடி .. போ .."

"என்ன; தங்கைச்சி. நீங்கள் மாட்டிக் கொண்டிருந்தது உங்கள் அப்பாவின் படமா?"

"அப்பா இருக்கிருரா? அவரைப் பார்க்கலாமா?"

"அப்பா இருக்கிருரா...ம் .. அவரை (மனதுள்)"...நீலா வின் கண்கள் கரைந்தன. அவளது சேலைத்தலைப்பு வடிந்த நீரை உறிஞ்சும் ஆற் றலில்லாது தோய்ந்து விட் டது.

பெரியவருக்கு ஒன்றும் புலன் போகவில்லை நீண்ட மௌனம். பெண்ணைப்பார்த் துக்கொள்ளும் போதெல்லாம் அவரது சிந்தனை மின்சார இணைப்பில் இயங்கும் விசிறி யின் வேகத்திலும் பன்மடங்கு சுழல ஆரம்பித்தது.

'நான் இந்த பதுளையை விட்டுப் பென்சனேடு போய்ப் பதினைந்து ஆண்டுகளாகி விட்டன. எவ்வளவு மாற்றம்? முதலில் திருவிளங்கத்தாரின் வீட்டையே என்னுற் கண்டு கொள்ள முடியாமலிருந்தது. அவர் பள்ளிக்கூட மனேஜர் என்றபோது யாரோ காண் பித்தார்கள். பதுளைப் பிட் டியா ரோட்டே பெரிய மாற் றம்; வீடுகளுக்கு நம்பர், வெட்டை வெளிகளெல்லாம் வீடுகள் எவ்வளவு முன்னேற் றம்? அப்பொழுது தங்கத் தின் வீடு இந்தப்பக்கத்திலே தான் ஒரு கொட்டிலாக இருந் தது அந்தக் கொட்டிலைக் கூடக்காணவில்லையே. அவள்.....? அவளுக்கு ஒரு மகள் .....? ...

"இவள் ஏன் இவளது அப் பாவை விசாரித்தபொழுது கண்ணீர் பெருக்கவேண்டும்? ஒருவேளை இவள் அப்பா சமீ பத்தில்இறந்திருக்கவேண்டும். ஆம்; ஆம்: அப்படியிருப்ப தாலேதான் படத்தையும் தூக்குகிருள்."

"ஏன் தங்கைச்சி? என்னை மன்னித்துக்கொள். கவலை யைத் தூண்டிவிட்டேன். உன் அப்பா சமீபத்தில் இறந்து விட்டார் போலி ருக்கு ....."

"இங்கே வருகிறேன்; இவள் அப்பா எப்போது இறந்து போயினுர் என்று சொல்கி

றேன்" என்பதுபோல தங் கம் வந்துகொண்டிருந்தாள்.

தலைவாசற்படியிற் கால் வைத்ததும் தங்கம் துணுக் குற்றுப்போனாள். அவள் உடம்பு வெல வெலத்தது. நீலாவைப் பார்த்தபோது அவள் முகம் பொருமிக் கொண்டிருப்பதைக் கண்ட போது தங்கத்திற்கு ஓ என்று அலற வேண்டும் போலிருந் தது. பதினைந்து ஆண்டுக ளிலும் ஓவசியர் தில்லைநாத ரோடு அநுபவித்திருக்கவேண் டிய சுகதுக்கம் அனைத்தும் ஒரு சேரத்திரண்டு உலுப்பு வதுபோல வேதனைப்பட்ட அவளால் பேச முடியவில்லை. அவளுக்கு வெட்கம் ஒரு புறம் துக்கம் மறுபுறம் வேதனை மத்தியில் நின்று அவளைப் பம்பரம் போல் ஆட்டிவைத் தது.

ஓவசியர் தில்லைநாதர் எப் படியிருப்பார் என்பதை மேல் தொங்கும் பிரதிமை தான் பேசமுடிந்தால் பேசியிருக்கும். சில நிமிஷ நேரம் தங்கம் தில்லைநாதருக்கு முன் தோற் ருமல் அவகாசம் கொடுத் திருந்தால், நீலாவிடம் அடுத்து விசாரிக்கும் விசா ரணையிலிருந்து, "இது தங்கத் தின் அரண்மனை" என்று அறிந்து கொண்டு மெல்ல நழுவியிருப்பார். மகன் சோதி நாதனும் தந்தையின் குற்றத் தில் தோய்ந்து கங்காஸ் நானஞ் செய்திருப்பான்.

மூன்று ஜீவன்களும் பெரிய புரட்சிகரமான கொந்தளிப் பில் சிக்கி கவலைப்படுவதை வேலைக்காரி இலட்சுமி மாத்தி ரம் ஆரச்சோர அவதானித்து நின்ருள். அவள் கண்கள் மேலுங் கீழுமாகப் புரண் டன.

நீலாவிடமிருந்து வேலை புரிந்த அவளுக்கு உபசார முறைகள் நன்கு தெரியும் ஆதலால் அடுக்களைப் பக்கம் விரைந்து போனாள்.

வீதி ஓரத்திலேயே நீலா வின் வீடு இருந்தது. நீலா வின் படலைக்கு முன்னுலேயே 'பஸ்' நிறுத்தும் நிலையமும் உண்டு. ஒரு 'பஸ்' அங்கே நின்று கொண்டிருந்தது. சற்று நேரத்திற்குள் படலை திறப்பதையும் உள்ளே இளை ஞனொருவன், இல்லை, சோதி நாதனே சூட்கேசுடன் வரு தலையும் தலைவாசலிலிருந்து கொண்டே மூவரும் பார்த்த னர்.

நீலா எதிர்த்து வருவாள் என்ற நினைவோடு வந்த சோதிநாதன் தன் கண்க ளையே நம்ப முடியவில்லை. அப்பாவா? வெறும் பிரமை.....

"இல்லை அப்பாதான்"

"பகற் கனவு; யாழ்ப்பாணம் எங்கே? பதுளை எங்கே? எப்படி அவருக்கு .....?

"உண்மையாக அப்பாவேதான் ....."

"சும்மா வெறும் அசடு; சொல்லுவார்களே 'அஞ்சினவன் கண்களுக்கு ஆகாசமெல்லாம் பிசாசு' என்று. அப்படித்தான்."

"இல்லைப் போகாதே உண்மையாகவே அப்பாதான். நிஜமாய் நம்பு"

இப்படியாக அவன் அறிவும் ஆராய்ச்சியும் போராடி கடைசியில் அவன் தன் அப்பா என்ற தீர்மானத்திற்கு வந்ததும் தலைவாசற்படியண்டை கால் மிதித்ததும் சரியாய்ப் போய்விட்டது.

தில்லைநாதர் முகத்தை எங்கோ திருப்பிக்கொண்டார். "திரும்பி ஓடலாமோ?" என்ற தீர்மானத்திற்குக்கூட ஆயத்தமான சோதிநாதன் பக்தி சிரத்தையோடு அப்பாவின் காலில் விழுந்து மன்னிப்புக் கோரினன்.

தங்கம் திடுக்கிட்டாள்; "அப்பா ...? இவர், அப்பா சோதிநாதன் மகன்? இவர் மகன்??"

"நீலா! பெரிய குற்றமடி! உன் அண்ணன்.. அம்மா... அப்பா... அம்மா என்று மாறி மாறி அழைத்து அலறினுள் அப்பா என்று நேருக்கு நேராக அழைக்கும் பேறு கிடைத்தபோது அவள் வாய் இனித்தது.


அம்மா! மனதார நான் குற்றஞ்செய்யவில்லை. அண்ணுவுங் குற்றஞ்செய்யவில்லை. அண்ணு, அப்பாவுக்கு எழுதிய கடிதம் இதோ இருக்கிறது இந்தக் கடிதத்தில் அவரது உடல் உரிமை யாரையோ பற்றுகிறது. அவரை அறியாமலே திருமணத்திற்கு எங்கோ மனதை நுழைத்திருந்தார்.

தவறுதலாக அவர் மாறி அனுப்பிய கடிதம் என் மனதைப் பெரிதும் மாற்றி விட்டது. இப்பொழுது சகோதர பாசம் இலகுவாய் என் இதயத்தில் நுழைந்து கொண்டது. அண்ணு! அப்பா!

"நீங்கள் எவரும் குற்றவாளிகள் அல்லர். நானே மகா குற்றவாளி. அருமைக் குணநலம் படைத்த என் மகள் நீலாவை நான் உரிமை பாராட்டாது வாழ்ந்ததன் பலனை அனுபவித்து விட்டேன்." என்ருர் தில்லைநாதர்.

★ ★ ★

# தங்கத் தாத்தா



நவாலியூர்

**க. சோமசுந்தரப்புலவர்**

தோற்றம்: **மே—1878** மறைவு: **ஜூலை—1953**

# புலவர் நினைவு

— வரதர் —

"சோமசுந்தரப் புலவர் தினம் ஜூலை 10. அவரைப் பற்றி இந்த இதழில் வெளியிடுவதற்கு ஏதாவது சுருக்கமாக எழுதித் தாருங்கள்" என்று 'கலைச்செல்வி' ஆசிரியர் கேட்டிருக்கிறார். புலவரவர்களைப்பற்றி எழுதுவதற்கு நான் பொருத்தமானவன் என்று ஆசிரியர் நினைக்கிறார் போலும். அதை எனது பாக்கியமென்று பெருமையுடன் கருதுகிறேன்.

---

*"மறுமலர்ச்சி"யோடு மலர்ந்த எழுத்தாளர் வரதர். பத்திரிகைத் தொழிலில் பழுத்த அநுபவசாலி. **"ஈழத்துச் சிறுகதை"** களில் அவருடைய 'பிள்ளையார் கொடுத்த' தைப் பார்க்கலாம்.*

---

ஆனால் புலவரைப்பற்றி என்ன எழுதுவது? அவருடைய கவிதைகளிலே சில அடிகளை எடுத்துக்காட்டி, அவை என் உள்ளத்தின் உள்ளே சென்று தொட்டதை எடுத்துக்காட்டலாமா? அது போதுமா? அந்த அளவில் இந்த "நினைவு விழா" வை நடாத்தி முடித்து விடலாமா?

மனம் ஒப்புக்கொள்ள வில்லை. அது பின்னேக்கி ஓடுகிறது. நான்கு வருடங்களுக்கு முன்னால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே ஒரு கூட்டம் நடந்தது. திரு. உடுவே. மு. சபாரத்தின சிங்கம் பி. ஏ. அவர்கள் தமது முதிர்ந்த வயதையும் மறந்து ஓர் இளஞனைப்போல ஓடி ஆடி அந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். சோமசுந்தரப் புலவர் அவர்ளுக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைப்பது பற்றி ஆராய்வதற்காக அந்தக் கூட்டம் நடைபெற்றது. பெரிய பெரிய மனிதர்கள் வந்திருந்தார்கள், -என்னைத்தவிர!

"அப்படிச் செய்வோம்; இப்படிச் செய்வோம்" என்று சொற்களை அடுக்கினர்கள். நினைவுச் சின்னங்கள் பல பல விதங்களில் எழுந்தன.— ஆனல் வெறும் வாய்ச் சொற்களினலே எழுப்பிய சின்னங்

கள்—எழுத்துருவம் கூடக் கொடுக்காத சின்னங்கள்—அவை காற்றேடு மறைந்து விட்டன.

அவர்களெல்லாம் பெரிய மனிதர்கள்! அவர்களுக்கு இதில் வினைக்கெட நேர மில்லை. இது அவர்களை வளர்க்காது.--வேண்டுமானுல் திறப்புவிழா நடாத்த வருவார்கள்!

எப்படியோ அந்த முயற்சி, பகற்கனவாய், வெறுங்கதையாய்ப் போய்விட்டது!

போனது போனதுதானு?

'கலைச் செல்வி' ஆசிரியர் என்னைத் தொட்டுத் தட்டியிருக்கிருர்.

'கலைச் செல்வி'யின் அடுத்த இதழிலேயே புலவரவர்களின் பெயரால்--அவரது நினைவுச் சின்னமாக ஒரு கவிதைப் போட்டி பற்றிய விபரங்கள் வெளிவரும். நண்பர்கள் எவரையும் கலந்தாலோசிக்க நேரமில்லாத சந்தர்ப்பத்தில் இதை எழுத வேண்டியிருக்கின்றது இன்னும் ஒரு மாதத்துக்கிடையில் சில நண்பர்களையாவது கலந்துகொண்டு பரிசுத் திட்டத்தைத் தயாரிப்போம். ஆர்வமும் அபிமானமும் உள்ளவர்கள் 'கலைச் செல்வி' ஆசிரியர் மூலமாகத் தங்கள் விருப்பத்தை விரைவில் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

ஆம், இப்பொழுதுதான் என் மனம் திருப்தியடைகிறது. புலவர் தினத்தில் எதை எழுதவேண்டுமோ அதை எழுதிவிட்டேனல்லவா?


## " கலைச்செல்வி "

கலைகள் பல வளர்க்கும் கன்னித் தமிழ் செல்வி

**தனிப்பிரதி: சதம் 35**

**ஆண்டுச் சந்தா: ரூபா 4/-**

ஆண்டுச் சந்தாவை அன்புடன் அனுப்பி அறிவுப் பணி புரிய ஆதரவு தாருங்கள்.

**கலைச்செல்வி**

கந்தரோடை, : : சுன்னுகம்.

# புத்தக விமரிசனம்

**ஈழத்துச் சிறுகதைகள்** (முதலாவது தொகுதி) தொகுத்தவர்: சிற்பி. வெளியீடு: தமிழருவிப் பதிப்பகம், சுன்னுகம். விற்பனே உரிமை: பாரி நிலையம், சென்னை. விலை: ரூபா 2-50.

ராஜாஜியும் வ. வே. சு ஐயரும் தமிழிலக்கிய உலகில் பயிரிட்ட சிறு கதைச்செடி வளர்ந்து, பரந்து, தாவி ஈழத்துச் சிறுகதைகள் என்னும் மலர்க்கொத்தை அளித்திருக்கிறது. இத் தொகுதியிலுள்ள 12 சிறு கதைகளிலும் ஒரு சோக ரேகை ஓடிக்கொண்டிருக்கிறது. உணர்ச்சி மோதுதல்கள், அமைதியின்மை, துயர், ஏமாற்றம், வேதனே, ஏக்கம் முதலியவை நாம் வாழும் துரிதயுகத்தின் அதிர்ச்சியில், கலக்கத்தில் தவிர்க்க முடியாதவை. சென்ற 15 ஆண்டுகளில் எழுதப்பட்ட இக்கதைகளில் இவை பிரதிபலிக்கப்பட்டிருப்பது ஆச்சரியமல்ல.

சிறு கதைக்கென எத்தகைய இலக்கணத்தை வகுத்துக்கொண்டு இப்புத்தகத்தைக் கையிலெடுப்பது என்று தீர்மானிப்பது கஷ்டம். அத்தனே நூதன உத்திகள் கையாளப்பட்டிருக்கின்றன. தமிழபிமானிகளுக்கு ஓர் அற்புத விருந்தாகவும் குறிப்பாக ஈழத்தமிழருக்கு களிப்பூட்டும் கதைக்கோவையாகவும்--இது அமையும் என்பதில் சந்தேகமில்லை. ருசி, கதையமைப்பு, கருத்து, பாத்திரசிருஷ்டி, கொச்சைப்பிரயோகம், மொழி உத்திகள், கலாசாரம் எல்லாம் நமக்கு ஏற்றதாக வெளிவரும் நூல்கள் அதிகமில்லை.

எடுத்த எடுப்பிலேயே தோணி (வ. அ. இராசரத்தினம்) வெள்ளம் (இராஜ அரியரத்தினம்), ஒரு பிடிசோறு (கனக செந்திநாதன்) ஆகிய மூன்றும் அற்புத கதைகளெனலாம். முதலாவதில் கிழக்குமாகாணமும், அங்குள்ள கிராமமொன்றில் வாழும் ஏழைச் செம்படவன் ஒருவனின் பேராசையற்ற லட்சியமும் இறுதியில் விடிவுகாலம் வருமென்ற நம்பிக்கையும் அழகாகப் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. குறிதவருமல் மையக்கருத்தை விட்டு பிறழாமல் கதை புனையப்பட்டிருக்கிறது. அடுத்த இரண்டிலும் அசல் யாழ்ப்பாணக் கிராமியப் பேச்சு வெகு அழகாகவும் வெற்றிகரமாகவும் கையா

ளப்பட்டுள்ளது. அதனுலேயே அது இயற்கையோடு ஒட்டிய தாக அமைந்திருக்கிறது. (இம்மூன்றும் என் கஜக்கோலின் படி உயர்ந்த தானம் பெற்றன.)

சம்பந்தன் மனிதன் தோன்றிய நாள் முதல் அவனை வாட்டிவரும் பிரச்சினை யொன்றை அலசியிருக்கிருர். புகழ் ஏந்திகளுக்கு நல்ல சொடுக்காகவும் சதி செய்யும் மனித உணர்ச்சியின் படப்பிடிப்பாகவும் இக்கதை அமைந்துள்ளது. சி. வைத்தியலிங்கத்தின் கங்கா தீர்த்தத்தில் பெண்ணின் விஷத்தன்மையிஞல் யோகியின் மானம் பறப்பது சித்திரிக்கப் பட்டுள்ளது. ஆனுல் தீமை செய்தவளுக்கும் அவள் நாண நன்னயம் செய்யும் உபாலியின் முடிவு நெஞ்சைத் தொடு கிறது. இந்த இரு ஆசிரியர்களுடைய தமிழ் நடையில் பண்பிருக்கிறது, படபடப்பில்லை. அமைதியும் அடக்கமும் இருக்கிறது, ஆர்ப்பாட்டமில்லை. கருத்தாழமிருக்கிறது, வெறும் வார்த்தையலங்கார வேலைப்பாடுகள் இல்லை.

இராஜநாயகனின் 'அவன்' நாசூக்கான ஒரு காதல் கதை மிகவும் துரித கதியில் கதை பாய்ந்தோடும் அழகைப் படித் துத்தான் ரசிக்கவேண்டும். கே. டானியல் எழுதிய 'உப் பிட்டவரை.....' காதலை சொகுசை, ஆடம்பர வாழ்வைச் சமூக நலனுக்காக உதறித் தள்ளும் இளைஞனின் குமுறலை அடிப் படையாகக் கொண்டது. கடற்கரைக்கிளிஞ்சலில் தோல்வி யடைந்த காதலன் நடிப்பைப் பயிற்சி செய்பவன் மூலம் இலங்கையர்கோன் வாசகர்களை ஏமாற்றுகிருர்.

தாழையடி சபாரத்தினத்தின் 'குருவின் சதி' பாரதக் கதை. புது மெருகு. செ. கணேசலிங்கனின் 'பதவிதுறந்தார்' கட்டுப்பெட்டியான தமிழ்ப்பண்டிதர் கொழும்பில் படும் அவதிகளைப்பற்றிய கிண்டல். 'சைவப்பாடசாலை நிர்வாகி யோடு ஒத்துவாழ முடியாது'. நல்ல சாட்டையடி. பாவம்! பண்டிதரால் கொழும்போடும் ஒத்துவாழ முடியாமல் போய் விட்டது.

வரதருடைய பிள்ளையார் கொடுத்தாரில் கோவிலில் காதல்பாட்டு விவகாரம் ஏழையை வாட்டித் திருவிழா செய் யும் சுந்தரமூர்த்தியின் கயமையை எடுத்துக் காட்ட முன் னுரையாயில்லாமல் புறம்பாக தனித்து நிற்கிறது. இந் நூலில் இடம் பெற்றுள்ள சகோதரி சகிதேவி தியாகராசா

மட்டும்தான். வாழ்வு உயர்ந்ததில் பனையின் உபயோகம் மது விலக்கு, ஏழைக்கு கள், பணக்காரனுக்கு பிரண்:டி, சமூக சேவை என்ற கருத்துகள் இடம் பெற்றுள்ளன. ஒரே கதையில் இவ்வளவு பெருமுயற்சி--எவ்வளவுதான் ஈடுபாடு கொண்ட விஷயங்களானாலும் --- எடுத்திருக்க வேண்டுமா எனக் கேட்கத்தோன்றுகிறது.

கதையாசிரியர்களைப்பற்றி இறுதியில் தரப்பட்டிருக்கும் குறிப்புகள் வரவேற்கப்பட வேண்டியவை. இன்றைய நயனாய்வு முறைகளின்படி ஆசிரியனைப்பற்றி அறிந்து கொள்ளாமல் அவன் இலக்கியப்படைப்பை அளப்பது பூரணமாக ஆகாது. இவர்களிடையே பழையகைகள், புதிய புள்ளிகள், கு. ப. ரா. பரம்பரையினர், புதுமைப்பித்தனின் வாரிசுகள், காண்டேகரின் சந்ததியினர் எல்லோரும் இருக்கிறார்கள். இவை ஈழத்துக் கதைகளில் தலைசிறந்தவை என்று யாரும் சொல்லவில்லை. ஆனால் முன்னுரையெழுதிய பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை சொல்லியிருப்பதுபோல் உலகத்தின் சிறந்த கதைகளுக்கு இணையானவை இந்த நூலில் இல்லை என்று எவரும் சொல்லத்துணியார்.

சிறுகதை ஆராய்ச்சியாளர் இனி ஈழத்தை வரண்ட பிரதேசம் என்று கூறிக்கொண்டிருக்க முடியாது. இதைப் போல இன்னும் பல தொகுதிகளுக்கு இடமுண்டு. வாசகர்கள் ஆதரவுக்குப் பஞ்சமிருக்காது. ஆகையால் இதைத் தொடர்ந்து பல வெளியாகும் என நிச்சயமாக நம்பலாம்.

நல்ல காகிதம், அழகான அமைப்பு, தெளிவான அச்சு, திருப்திகரமான அட்டை, பிழைகள் கிடையாது. விலை மட்டும் கொஞ்சம் அதிகம் என சிலர் கூறலாம். அட்சர லட்சம் கொடுத்துத் தமிழ் வளர்த்தவர்களின் வழித்தோன்றல்களல்லவா நாம்?

(தேவன்—யாழ்ப்பாணம்)

---

## வாழ்த்துகின்றோம்!

சென்ற மாதம் 26-ந் திகதி சென்னையில், பிரபல பின்னணிப் பாடகர் திரு. ஏ. எம். ராஜா, பிரபல பின்னணிப் பாடகி ஜிக்கியைத் திருமணம் செய்துகொண்டார். 'தம்பதிகள் சுதியும் லயமும் போல், வீணையும் நாதமும் போல் இணைந்து வாழ்க' என்று **'கலைச்செல்வி'** வாழ்த்துகின்றாள்.

# வளரும் எழுத்தாளர் பகுதி

**எழுத்தார்வம் கொண்ட இளைஞர்களே!**

உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, இப் பகுதி தொடர்ந்து வெளிவரும். உங்கள் சிந்தனையில் தேங்கி நிற்கும் சீரிய கருத்துக்களைச் செந்தமிழில் வடித்து எமக்கு அனுப்புங்கள். எல்லாவற்றையும் இயன்றளவு வெளியிட முயல்வோம். பிரசுரத்திற்குத் தகுதியற்றவற்றைத் திருத்தக் குறிப்புகளுடன் திருப்பி அனுப்புவோம். தாளின் ஒரு பக்கத்தில் மையினல் எழுதி, கீழேயுள்ள பத்திரத்தை நிரப்பி, போதியளவு தபால் தலைகள் வைத்து அனுப்புக.

## வளரும் எழுத்தாளர் பகுதி

பெயர் :........................................................................

புனைபெயர்: (ஏதாவது இருந்தால்)..........................................

..................................................................................

முகவரி :.......................................................................

**கட்டுரை** / **கவிதை** / **கதை**/யின் தலைப்பு:.................................

..................................................................................

இதனுடன் நான் அனுப்பும்.......................................... என் சொந்தக் கற்பனை என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

திகதி.............................. ..........................................

கையொப்பம்.

வளரும் எழுத்தாளர் பகுதி

# அன்னையின் ஆவல்

"யாழ்நங்கை"

(இராமநாதன் கல்லூரி மாணவிதான் 'யாழ்நங்கை'. சற்று முயன்றால் சிறந்த கவிஞராகலாம். இக் கவிதை சென்ற சித்திரையில் எழுதப்பட்டது.)

முடிவில்லாப் பெருமைகளை எனக்களித்த மக்காள்!
முடி கவிழ வீழுமென்னை நீவிரும் காணீரோ!
கொடி கொண்டே அன்னையெனைப் போற்றிய கண்
மணிகாள்
படிப் படியாய் மடியுமெனைப் பார்த்து மகிழ்வீரோ!

சங்கங்கள் கொண்டு முன்னாள் வளர்த்திட்டார் புலவோர்
எங்கணுமே எந்தன் புகழ் பரப்பி வைத்தார் மன்னர்
பொங்கி எழும் ஆசையுடன் எனைப்பலரும் கற்றார்
சிங்கம் நிகர் நீவிர் இன்று சரணமடைவதுமேன்?

தமிழர் நா மெனக் கூறத் தயங்குகின்ற பேரைத்
தன்மான முறச் செய்து தனிப்பெருமை யுரைப்பீர்!
தனியரசு புரிந்திடவே தமிழ் மாது என்னைத்
தரணியெலாம் முழக்கி மனம் மகிழ்ச்சியுறச் செய்வீர்!

## விமர்சனப் போட்டி

இந்த [illegible] ப்பற்றிய
விமர்சனத [illegible] ன்றோம்.
விருப்பு, [illegible] ழுதப்பட
வேண்டும். [illegible] ம் விமர்
சனங்களை [illegible] "கலைச்
செல்வி" [illegible]

# அறிவரங்கம்

## மாணவர் ஆற்றல் போட்டி எண் 1

கல்லூரிகள், பாடசாலைகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் அனைவரும் இதில் பங்குபற்றலாம். விடைகளை வெள்ளைத் தாளில் மையால் எழுதிக் கீழேயுள்ள முகவரியை **வெட்டி ஒட்டி** ஆகஸ்டு 5-ந் திகதிக்கு முன் அனுப்பவேண்டும். சரியான விடைகள் அனுப்பும் முதல் மூன்று பேருக்கும் பரிசுகள் வழங்கப்படும். யாருமே சரியான விடைகள் அனுப்பாதுவிட்டால் ஆகக்குறைந்த பிழைகளையுடைய விடைகளை அனுப்பியோருக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

1. உலகப் பொதுமறை எது?
2. எழுத்தாளர் அகிலன், தான் எழுதிய எந்த நாவலுக்கு முதன் முதல் பரிசைப்பெற்றார்?
3. சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசைப்பெற்ற இலங்கை எழுத்தாளர் யர்ர்?
4. இலங்கையில் முதன் முதலாகக் காட்டப்பட்ட தமிழ்ப்படம் எது?
5. ஆசிய ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற இலங்கை வீரர் யார்?
6. கடலோடு தொடுபடாத இந்திய நதி எது?
7. சர். சி. வி. இராமனுக்கு ஏன் நோபல் பரிசு வழங்கப்பட்டது?
8. “புலி துஞ்சு போகிய கல்லளைபோல ஈன்ற வயிரே இதுவே” இப்பகுதி எந்த நூலில் இடர்பெறுகிறது?
9. யேசுநாதரின் கடைசிப் போசனக் காட்சியை வரைந்த சைத்திரீகன் யார்?
10. சைப்பிரஸின் தற்போதைய கவர்னர் யார்?

# ஏன் படைத்தாய்?

— சிற்பி —

திரிபுரமெரித்த விரிசடைத் தேவா! பெரு நெருப்பிலிட்டு என்னைப் பொசுக்கிவிடு. வேதனைத் தீயிலே வேகவைக்காதே. நங்கையை இடையில் தாங்கிக் கங்கையைச் சடையில் தாங்கிய சங்கரமூர்த்தி! பொங்கியெழும் பெருவெள்ளத்துள் புதைத்து என்னைப் போக்கிவிடேன். உடலைக் கருக்கி உள்ளத்தை உருக்கி ஏன் என்னைச் சித்திரவதை செய்கின்ருய்? நீ என்ருே ஒருநாள் இழைத்த தவறுக்காக என்றேனும் நான் இழித்துப் பழித்திருக்கின்றேனு? பாரையெலாம் படைத்துக் காக்கும் பரமசிவனே! உனக்கு இதயம் என்பது இருந்தால், அதிலே இரக்கம் என்பது ஊற்றெடுக்குமானுல், இவ்வளவு தூரம் என்னை இடர்ப்படுத்த மாட்டாயே! தவறு செய்வது மனித இயற்கை. அதை மன்னிப்பது தெய்வ சுபாவம். ஆன்ருேரும் சான்ருேரும் அன்றே எழுதிவைத்த அரிய மொழி இது. ஆனுல் இங்கே நிலைமை முற்றிலும் மாறியிருக்கின்றது. தவறு செய்தவன் நீ. அதைப் பணிவன்புடன் எடுத்துக் காட்டிப் பெருந்தன்மையுடன் மன்னித்து விட்டவன் நான்-- எலும்பையுந் தோலையும், சதையையும், சடலத்தையும், உயிரையும், உள்ளத்தையும் உன்னிடமிருந்தே பெற்றவள்; உன்னுல் படைக்கப்பட்டவள். தடுக்க முடியாத தவறு என்ருலும் அதை எடுத்துக்காட்டிய பொழுது நீ அதைத் துடைத்துத் திருத்தியிருக்கலாம். அல்லது உடைத்து முடித்திருக்கலாம். அல்லவா? ஆனுல் நீ எதுவுமே செய்யவில்லை. பலன்? எனக்கு ஏக்கம், ஏமாற்றம், வேதனை வெந்துயர். இன்ப புரியின் உச்சியை எட்டிப் பிடிக்கவிருந்த நான் துன்பக் கடலின் அடியிலே துடித்துக்கொண்டிருக்கின்றேன். நீ ஒன்றன் பின் ஒன்ருகச் செய்த தவறுகள் அனைத்தும் ஒரேயடியாக என் கண்முன்னே வந்து நிற்கின்றன. ஆயிரத்தோராவது தடவையாக அவற்றைச் சொல்லத்தான் போகின்

றேன். உன் இதயக் கல்லை என் ஏக்க மூச்சால் இளக வைக்க முடியாதா?

நான் பிறந்த கதையை, நீ புரிந்த முதல் தவறைக் கூறுகின்றேன். கோடி கோடியாகக் கொட்டிக் குவித்தும் கொஞ்சி விளையாடக் குழந்தை இல்லையே என்று குறைப்படுவோர் நிறைய இருக்கிறார்கள் இந்த உலகத்திலே. ஆனால் நீயோ, இன்றைக்கு உண்டு விட்டால் இனி எப்போது உண்பது என்பது தெரியாது ஏங்கித் தவிக்கும் ஏழைப் பெற்றோர்களின் எட்டாவது குழந்தையாக என்னைப் படைத்தாய்! எட்டாவதும் பெண் என்ற அதிர்ச்சியைக் கொடுத்து, பத்து மாதம் சுமந்து பெற்றவளைப் பரலோகத்திற்கனுப்பினாய்.

சகோதரிகளின் வெறுப்பையும் சுற்றத்தினரின் ஏச்சையும் சகித்துக்கொண்டு வளர்ந்தேன். ஏற்கனவே மோசமாயிருந்த எங்கள் குடும்பத்தின் பொருளாதார நிலையை மேலும் மோசமடையச் செய்வதற்கென்றே நான் அவதரித்து விட்டதாக எல்லோரும் என்னைக் கரித்துக்கொட்டினர். வயிற்றைக்கிள்ளும் பசியுடன் வாடிய நாட்கள் எத்தனையோ! கடும் நோயுடன் போராடிக் கஷ்டப்பட்ட நாட்கள் கணக்கிலடங்கா! இளவயதின் விளையாட்டுப் புத்தியில் இவை எனக்குப் பெரிதாகப் படவில்லை. ஏழைமை அரக்கனின் மடியிலே கிடந்து துன்பமலைகளுக்கூடாகத் தவழ்ந்து, துயர வெள்ளத்தில் மிதந்து, கஷ்டமெனும் பாறைகளில் மோதுண்டு நடக்கும் பருவத்தை நான் அடைந்தபோதுதான் உலகம் தன் கண்களை விழித்துப் பார்த்தது!

அளவிற்கு மீறிய அழகை என்மேல் அள்ளிச் சொரிந்து விட்டாயாம். குயிலைப் பழிக்கும் குரலைக் கொடுத்துவிட்டாயாம். நான் அழும்போது கூட என் குரலிசையில் எத்தனையோபேர் மயங்கிவிட்டார்களாம்! இந்த உண்மைகளை நான் அன்று உணரவில்லை. என்னைப் பார்த்த சிலர் இப்படி வாய்விட்டுக் கூறினார்கள். 'பிள்ளை இல்லையே' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த பெரிய மாமா என்னை எடுத்து வளர்ப்பதற்கு இவைதான் காரணமாக இருந்திருக்கலாம்! பணப் போர்வையினால் தன்னை மூடிக்கொண்டு எங்களையெல்லாம் எட்டிக்கூடப் பார்க்காமலிருந்தவர் அவர்.

பட்டுப் பாவாடைகள், பட்டுச் சட்டைகள் பல வர்ணங்

களில் கிடைத்தன. காதிலும், கழுத்திலும், கையிலும் தங்க நகைகள் ஜொலித்தன. இவற்றின் சுமை தாங்காது என் தலை குனிந்தது. துள்ளித் திரிந்த நான் மெள்ள நடக்கத் தொடங்கினேன். ஓடி மறைந்த நாட்கள் என் 'பல்வத்'தைத் தேடிக் கொண்டு வந்து தந்தன! அங்கங்கள் மகிழ்ச்சிப் பூரிப்பில் மின்னின. நான் பெரியவளானேன்! வெள்ளித் தட்டிலே தினமும் சாப்பாடு! வெறுந் தரையில் புரண்ட நான் 'வெல்வெட்' மெத்தையில் துயின்றேன். கல்லூரிக்குச் செல்வதற்காகப் புத்தம் புதுக் கார் ஒன்று வாங்கப்பட்டது. இவையெல்லாம் வேண்டுமென்று நான் உன்னைக் கேட்டேனா? நீயாக வலிந்து கொடுத்தாய்! தன் பணப் பெருமையை நிலை நாட்ட என்னைப் பயன்படுத்திக் கொண்டார் மாமா. இவ்வளவு செய்தும் என் மனத்தை மட்டும் நீ மாற்றவில்லை. பணக்காரப் பெண்ணாக வாழ்ந்தேன். ஆனால் 'பணக்காரப் புத்தி' வரவில்லை. ஏழைக்காக இரங்கும் இதயம், உண்மை அன்பிற்காக உயிரையும் கொடுக்கும் உள்ளம் என்னிடம் இருக்கத்தான் செய்தது. இதை என் திறமை என்றெண்ணி இறுமாந்திருந்தேன். ஆனால் இதுவும் உன் கீழ்த்தரமான சூழ்ச்சி என்பது இப்போதுதான் புரிகின்றது!

நீ சூழ்ச்சி செய்யாதிருந்தால் அந்த 'விபத்தில்' நான் சிக்கியிருக்க மாட்டேனே! விபத்து' என்று சொல்வது, விசித்திரமாகப் படலாம். இளம் உள்ளங்கள் இணைந்து கலப்பது இன்பத்தின் உச்சியாகப் படலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை, என் உயிரைக் குடித்து என்னைத் துடிதுடிக்கச் செய்யும் மாபெரும் விபத்து அது!

இன்னமும் அந்தக் காட்சி என் மனத்தைவிட்டு நீங்கவில்லை. எங்கள் மாணவர் மன்றத்திற்கு எழுத்தாளர் ஒருவர் பேச வந்திருந்தார். அவர் இளைஞர் என்பதைத் தவிர எனக்கு வேறொன்றும் அப்போது தெரியாது. கடவுள் வாழ்த்துப் பாடுவதற்கு நான் அழைக்கப்பட்டேன். அந்த இளைஞருக்குப் பக்கத்தில் நின்று பாடுவதற்கு வெட்கமாக இருந்தது. என்ன செய்வது! கல்லூரி அதிபரின் கட்டளையைத் தட்டிக்கழிக்க முடியாதே! என்ன பாடினேனோ எனக்குத் தெரியாது. பாடும் போது குரல் லேசாக நடுங்கிக்கொண்டிருந்தது. பாடி முடிந்ததும் ஓடிச் சென்று தோழிகளிடையே அமர்ந்து கொண்டேன். எழுத்தாளர் பேச்சாளரானார். 'கடவுளைப் பற்றியும் மதத்தைப்பற்றியும் அவ்வளவாகச் சிந்திக்காத

வன் நான். ஆனால் சற்று முன்பு கேட்ட கடவுள் வாழ்த்திற்குப் பிறகு என் மனம் மாறிவிட்டது' என்றார் மனத்தை மயக்கும் புன்னகையுடன்.

அதிபர் உட்பட எல்லோரும் கைதட்டி அவரை ஆமோதித்தனர். என் அருகிலிருந்த தோழிகள், 'மயக்கிவிட்டாயேடி' என்று சொல்லிக் கொண்டே என் துடைகளைக் கிள்ளிவிட்டனர்! எல்லோருடைய பார்வையும் என் மீதுதான் விழுந்தது நான் தலையைக் குனிந்து கொண்டேன். என்னைப் புகழ்ந்ததினாலோ என்னவோ அவர் பேசியவற்றை எல்லாம் கூர்ந்து கவனித்தேன்.

'ஏன் எழுதுகின்றேன்?' என்பது பற்றிப் பேசினார். 'மனிதன் மனிதனாக வாழ்வதற்குச் சில சட்ட திட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தினான். இதே கட்டுப்பாடுகள் இன்று அநாவசிய வளர்ச்சியடைந்து, தம்மைப் படைத்த மனிதனையே விழுங்கி ஏப்பம் விடுகின்றன. இந்த அநியாயத்தை அடியோடு அழித்துவிட்டு 'அன்பு' எனும் சக்தியை அவனி முழுதும் பரப்பும் நோக்கத்துடன் தான் எழுதுகின்றேன்.' வெண்கலக் கிண்ணத்துள் தங்கத்துண்டுகளைப் போட்டுக் குலுக்கினாற் போன்று 'கணீரெ'ன்று ஒலித்தது அவர் குரல்.

பின் தானெழுதிய கதைகள் சிலவற்றைக் குறிப்பிட்டு அவை பிறந்த வரலாற்றைச் சுவையுடன் கூறினார். கதைத் தலைப்புகளைக் கேட்டதும் எல்லோரும் பரபரப்படைந்தோம். 'பூங்குயில்' என்பவர் எழுதிய கதைகள் அவை. 'பூங்குயிலி'ன் கதைகள் வெளிவந்த உடனேயே விழுந்து விழுந்து படிப்போம். கதைகளிலுள்ள எளிய சொற்கட்டு, இனிய தமிழ் நடை, இலட்சிய முடிவு எல்லாம் எங்களுக்குத் தலை கீழ்ப்பாடம். அவ்வளவு தூரம் எங்கள் நெஞ்சைக் கவர்ந்த எழுத்தாளர் அவர். அதே கதைகளை இவரும் எழுதியிருக்கின்றாராமே! அப்படியானால் பேச்சாளர் சாமிநாதனும் எழுத்தாளர் 'பூங்குயிலு'ம் ஒரே ஆசாமிதானா?

பேச்சு முடிந்ததும் மாணவர் கூட்டம் அவரை மொய்த்துவிட்டது. இடித்துத்தள்ளிக் கொண்டு நானும் சில மாணவிகளும் அவரருகில் சென்றோம்.

'பூங்குயில்'என்பவர் நீங்கள் தானே? ஏன் உங்கள் புனை பெயரைக் கூறுதுவிட்டீர்கள் இன்று?' என்று கேட்டேன் நான் என்னை மறந்து.

'சொந்த முறையில் என் எதிரிகளாயிருப்பவர்களும், என் கதைகளைப் படித்துவிட்டுப் பாராட்டியிருக்கின்றூர்கள். ஒரு சிலர் தங்கள் தவறுகளை உணர்ந்து திருந்தியுமிருக்கின்றூர்கள். புனை பெயரில் நான் மறைந்திருப்பதாற்றுன் இது சாத்தியமாகின்றது' என்றூர் அமைதியான குரலில். நிமிர்ந்து என்னைப் பார்த்ததும் 'நீங்கள்தானே கடவுள் வாழ்த்துப் பாடியவர்?' என்றூர். 'ஆம்' என்று கூறித் தலையைக் குனிந்து கொண்டேன். இன்னமும் மறக்கவில்லையே அவர்! என் உடம்பெங்கும் ஒருவித இன்ப உணர்ச்சி பரவியது. இன்ப உலகத்தை எட்டிப்பிடித்து என் இதயப் பறவை சிறகடித்துப் பறந்தது.

என் காரிலேயே அவரை அழைத்துச் செல்ல வேண்டும் என்று அதிபர் கேட்டுக் கொண்டார். நினைவிழந்து, நிலைதளர்ந்த நான் நிச்சயம் நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்டேன். பொருமைக் கண்களால் என்னைச் சுட்டெரித்தனர் என் தோழிகள். என் நெஞ்சோ வெற்றிப் பெருமிதத்துடன் எக்காளமிட்டது.

கார் மிக மெதுவாகச் சென்றது. அவர் எழுதிய கதைகள் அனைத்தையும் தனித்தனியாக எடுத்து விமர்சனம் செய்தேன். பொங்கி எழும் உவகையுடன் புன்னகை அரும்ப என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'உங்களைப் போன்ற ஒருத்தியை என் ரசிகையாகப் பெற்றது என் பாக்கியந்தான். என் கதைகளைப் படிக்காது ஒரேயடியாகப் புகழ்வதை விட, படித்துவிட்டு அவற்றின் குறை, நிறைவுகளைக் கூறுபவர் ஒரு சிலர் தான்' என்றூர். நான் கடைக் கண்ணுல் அவரைப் பார்த்தேன். சிறிது நேரம் மௌனம் நிலவியது. கண்கள் மாத்திரம் அடிக்கடி சந்தித்துக் கொண்டன.

அவருடைய குடும்ப நிலை பற்றிக் கேட்டேன். தன் ஏழைமைநிலையை உருக்கமாக விளக்கினூர். வறுமையின் மடியில் வளர்ந்தவள் நான் அதனுல் அதன் கொடுமையும் எனக்கு நன்கு தெரியும். ஏற்கனவே தோன்றிய அன்புணர்ச்சியுடன் இரக்கமும் கலந்து கொண்டது.

அவர் வளமாக வாழ்வதற்கு வகையாக ஏதாவது செய்ய வேண்டும். அவருக்குத் தேவையானவைநல்லஉணவு, போதிய ஓய்வு, படிப்பதற்கு; புத்தகங்கள் எழுதுவதற்குத் தனிமை --- இவை எல்லாம் என் வீட்டில் நிறைய இருக்

கின்றனவே! வறுமையிலே வாடுகின்ற இவருக்கு வசதிகள் செய்து கொடுத்தால் இலக்கியத்தின் சிகரத்தையே எட்டிப்பிடிக்க மாட்டாரா?

அவருடைய வீடு கிட்டியது. என் வீட்டு முகவரியைக் கூறி, 'வசதியான பொழுதெல்லாம் நீங்கள் அங்கு வாருங்கள். உங்கள் எழுத்துப் பணியை அங்கிருந்தே நடத்தலாம்' என்றேன்.

வசதியான பொழுதெல்லாம் அவர் வரவில்லை. நானே சென்று அழைத்து வந்தேன். வசதிகள் எல்லாவற்றையும் செய்து கொடுத்தேன். பாலும் பழமும் கொடுத்தேன். பகட்டான உடைகளைப் பரிசாகக் கொடுத்தேன். படிப்பதற்கு நிறையப் புத்தகங்களைக் கொடுத்தேன். எழுதுவதற்குத் தனிமையை மட்டும் கொடுக்க முடியவில்லை. அவர் இல்லாத போது எண்ணியெண்ணி ஏங்கும் நான் அவர் வந்தவுடனேயே அவரருகில் சென்று அளவளாவத் தொடங்கிவிடுவேன்.

நாட்கள் நகர்ந்தன. நெஞ்சும் நெஞ்சும் கலந்தன. எனக்குள் அவரும் அவருக்குள் நானுமாக மாறினோம். பிரபல எழுத்தாளர் ஒருவரின் பேரன்புக் காதலி நான் என்பதை உணர்ந்தபோது நானடைந்த மகிழ்ச்சி! அப்பப்பா!

இதுதான் எங்கள் அன்பு மொட்டு, காதலாக மலர்ந்த கதை.

இவ்வளவு தூரம் எங்கள் அன்பை வளர்த்து இன்பக் கோட்டைகள் கட்டச் செய்த நீ, ஏன் ஒரேயடியாக அந்தக் கோட்டையைத் தகர்க்கத் துணிந்தாய்? சுடுகாடு அடங்கலும் நடமாடும் சோதியே! சொல். இடுகாட்டினிலே இருவரையும் புதைத்திருந்தால் இன்பமுடன் இணங்கியிருப்போமே! அதைவிடுத்து, இடித்துச் சிதைத்தாயே ஏனென்று சொல்வாயா?

கன்னத்தோடு கன்னம் சேர்த்துக் காதற் கதைகள் பேசிக்கொண்டிருந்தோம் ஒரு நாள். திடீரெனத் தோன்றினார் மாமா. திகைத்து விட்டோம் நாம்.

'மஞ்சுளா! உந்தப் பரதேசிப்பயலுடன் உனக்கென்ன வேலை?' என்று உறுமினார்.

நடுநடுங்கினேன் நான். ஒன்றுமே பேச முடியாதபடி வாயடைத்து விட்டது. பொங்கியெழுந்த 'பூங்குயில்,' "பணக்காரரென்றால் மரியாதையாகப் பேசக் கூடாதென்பது சட்டமா?" என்றார் மாமாவைப் பார்த்து.

"போடா வெளியே" என்று கூச்சலிட்டார் மாமா.

நான் மாமாவின் கால்களில் விழுந்து கதறினேன். "பூங்குயிலை" ஒன்றும் செய்ய வேண்டாமென்று கெஞ்சினேன். "நீ உள்ளே போ" என்று என்னை அதட்டினார். மாமாவின் மேல் எனக்கும் ஆத்திரமாக வந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "பூங்குயிலை"ப் பார்த்தேன். அவர் அங்கில்லை. 'கேட்'டைத் திறந்துகொண்டு வெளியே சென்றார். ஓடோடியும் சென்று அவர் கால்களைக் கட்டிப்பிடித்தேன்.

"உன்னை அடைய ஆசைப்பட்டது என் தவறு. ஏழையென்றாலும் எனக்கு இதயம் உண்டு." என்று சொல்லி, என் கைகளை உதறிவிட்டு 'விறு விறெ'ன்று நடந்தார். மாமாவின் இரும்புக் கரங்கள் என்னை வீட்டிற்குள் தள்ளின.

வீடு சிறை போலானது. இரண்டு நாட்களாக வெளியே செல்ல முடியவில்லை. மாமா இல்லாதபோது 'பூங்குயிலை'த் தேடிப் புறப்பட்டேன். வீடு பூட்டிக்கிடந்தது. என் நெஞ்சு 'பகீரெ'ன்றது. அவர் கதையெழுதும் பத்திரிகாலயங்களுக்குச் சென்று விசாரித்தேன். விபரம் ஏதுவும் அறிய முடியவில்லை. கண்கள் இருண்டன. மயங்கிக் கீழே விழுந்தேன். நினைவு தெளிந்த போது மாமாவின் வீட்டில் கிடப்பதை அறிந்தேன்.

'பூங்குயில்' ஏழைதான். ஆனால் அவருக்கெனத் தனியான சில இலட்சியங்கள் உண்டு. உறுதி படைத்தவர் அவர். இழித்துப் பழித்துப் பேசிய மாமாவின் வீட்டிற்கு இனி வரமாட்டார்? எந்த மூலையிலிருந்து எப்படியெல்லாம் வாடுகின்றாரோ? என்னைப் பற்றித்தான் என்ன நினைத்திருப்பார்?

தன் பணத்திமிரைக் காட்டிக் குலப் பெருமையை நிலை நாட்டியதில் மாமாவிற்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவருடைய விருப்பத்திற்கு இணங்கினால் நான்கோடீஸ்வரர் ஒருவரின் மனைவியாகலாம். பணக்காரரின் காதல் பலர் சிரிக்கும் ரகசியம். இன்றைக்கிருக்கும் காதலர் நாளைக்கிருப்பாரென்று எண்ண முடியாது. பணத்தைப் பெருக்குவதைப் போன்று தம் காதலரின் தொகையையும் பெருக்க விரும்புவார்களாம் பணப் பிசாசுகள்! ஆனால் என் இதயமோ என்றோ மறைந்து விட்ட "பூங்குயிலை" எண்ணியல்லவா தவிக்கின்றது?

பட்டுப்புடவைகளும் பஞ்சணை மெத்தையும் பருக்கைக் கற்களாகி என்னுடலைப் பதை பதைக்கச் செய்கின்றன. நான் விரும்பியுண்ணும் விருந்து விஷமாக மாறி என்னை விரட்டுகின்றது. பார்த்த இடமெல்லாம் 'பூங்குயிலின்' உருவம் தோன்றி என்னைப் பயமுறுத்துகின்றது. அவரை நினைத்த நெஞ்சினால் வேறொருவரை நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. நினைவுச் சுழலிலே சிக்கித் தவிக்கின்றேன். சாகாமல் சாகின்றேன். வேகாமல் வேகின்றேன்.

பணம், அந்தஸ்து என்ற இரும்புத்திரை இல்லாதிருந்தால் என்னுடையவரும் நானும் என்றோ இணைந்திருப் போமே! ஏழையாகப் படைத்த என்னை, ஏன் திடீர் பணக் காரியாக்கினாய்? கருணாமூர்த்தி என்று கூறிக்களிப்படையும் கல் நெஞ்சனே! இந்த ஏழைக்கு அழகை அள்ளிச் சொரிந்தது உன் தவறு. பின் பணக் காரியாக்கி, இனிய குரலைக் கொடுத்து எழுத்தின் வேந்தரைக் கவரச் செய்தது உன் தவறு. இரக்கமற்ற ஒரு மாமாவை எமக்கிடையில் கொண்டு வந்தது உன் தவறு. இந்தத் தவறுகளை நான் மன்னித்துவிட்ட பின்பும் ஏன் இரக்கங் காட்டுகின்றாயில்லை?

பணக்காரக் கும்பலில் என்னையும் சேர்த்துவிட்ட நீ, ஏன் எனக்கென்று தனியான ஓர் இதயத்தைப் படைத்தாய்? என்றோ மலர்ந்து எப்படியோ மறைந்துவிட்ட காதலை எண்ணிக் கண்ணீர் வடிக்கவா? எட்டவே முடியாத உலகத்தில் இறகடித்துப் பறக்கவா? இதயங் கவர்ந்தவரை எண்ணி எண்ணி ஏங்கவா? ஏங்கி ஏங்கி வாடவா? வாடி வாடிச் சாகவா? இனியாவது சொல். இதயமே இல்லாத நீ எனக்கு மாத்திரம் இதயத்தை ஏன் படைத்தாய்?

* * *

## அட்டைப்பட விளக்கம்

பொற்குடந் தாங்கிப் புதுமலர் ஏந்திப் புன்னகை தவழப் பவனி வருகின்றாள் கலைச்செல்வி. இப்பொற்குடத்திலிருக்கும் பைந்தமிழமுதம் பார் முழுதும் பரவுக. இவ்வழகான அட்டைப் படத்தை வரைந்தவர் ஓவியர் சர்மா அவர்கள்

# ★ புரட்சி ★

## இலங்கையில் உருவாகும் முதல் தமிழ்ப் படம்!


தமிழகத்திலிருந்து ஆண்டுதோறும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன ஐம்பதுக்கு மேற்பட்ட படங்கள். இலங்கையில் திரையிடப்பட்டு "பொக்ஸ் ஆபிஸ் ஹிட்"டாகி புதிய 'றெக்கோட்'டை ஏற்படுத்துகின்றன பல தமிழ்ப்படங்கள்! இந்தியப் படாதிபதிகளைப் பின்பற்றி, இலங்கையிலும் படாதிபதிகள் தோன்றி பத்து வருடங்களுக்கு மேலாகின்றன. சேய் நாட்டிலிருந்து தாய் நாடு சென்று, படம் தயாரித்து வந்து, இலங்கைப் படாதிபதிகள் என்ற பெயரை முதலில் தட்டிக் கொண்டவர்கள் தமிழர்கள் தான்! ஆனால், அவர்கள் தமிழ்ப் படாதிபதிகள் என்ற பெயரை இன்னும் ஈட்டிக் கொள்ளவில்லையே--- பிடித்ததெல்லாம் சிங்களப்படம்! இங்கைப் படாதிபதிகளுள் ஒருவரான திரு. முனுஸ வலம் வந்த 'உலகம்' (தமிழ்ப் படம்) கூட இந்த நாட்டை எட்டிப்பார்க்கு முன்னரே படுத்துவிட்டது.

**"கலாமதி"**

இலங்கையிலும் சில சிறு ஸ்ருடியோக்கள் முளைத்தன. இந்தியா சென்று அங்குள்ள ஸ்ருடியோக்களிலேயே சிங்களப் படம் தயாரித்தவர்கள், இங்குமட்டுமென்ன தமிழ்ப்படங்களையா சுட்டுத்தள்ளப் போகிறார்கள்? இரண்டு மாதத்திற்கொரு சிங்களப் படம் இலங்கையின் எழிற் காட்சிகளுடன் இங்குள்ள ஸ்ருடியோக்களிலிருந்து புறப்படுகின்றன.

உயர்தரமான தமிழ்ப் படங்கள் தமிழகத்திலே தயாரிக்கப்பட்டு இங்கே திரையிடப்பட்டாலும்: இங்குள்ள தமிழ்ப் பட ரசிகர்கள் மத்தியில் ஓர் ஆசை இல்லாமலில்லை. இலங்கையின் அழகுக் காட்சிகளைக் காணவேண்டுமெனில் ஹொலிவுட் தயாரிப்புகளான "பிறிட்ஜ் ஓவர் றிவர் காவாய்" (Bridge Over River Kwai) "எலிபன்ட் வாக்" (Elephant Walk) என்னும் ஆங்கிலப்படங்களுக்கு, அல்லது சுரத்தலி', 'சட—

சுலங்', 'பொடி புத்தா' போன்ற சிங்கப் படங்களுக்குத்தானு போக வேண்டும்? என்ற கேள்வி இலங்கைத் தமிழ்ப்பட ரசிகர்கள் நெஞ்சில் எழாமலில்லை. கலையார்வமுள்ள நடிகர்கள்



தங்கள் திறமையைக் காட்ட இங்கேயே ஒரு படத்தைப் பிடித்து, அதில் ஈழத் தமிழ்ப்பிரதேசக் காட்சிகளைப் புகுத்தி, ஒரு தமிழ்ப்படத்தை தயாரிக்க எந்த படமுதலாளியும் துணிய

வில்லையே என்ற குமுறலும் இங்குள்ள படரசிகர்கள் இதயத்தில் எழுந்து கொண்டிருக்கிறது.

இப்படியான சூழ் நிலையிலேதான் 'அண்ணு பிலிம் புரடக்ஷன்'ஸார் 'புரட்சி' என்ற தமிழ்ப்படத்தை முழுக்கமுழுக்க இலங்கையிலுள்ள தமிழ் நடிகர்களைக் கொண்டு தயாரிப்பதாக செய்தி வந்திருக்கிறது. 'இலங்கையிலும் ஒரு தமிழ்ப் படத் தயாரிக்கப்பட்டது' என்ற சாதனையை ஏற்படுத்துவற்காகம் தான் 'அண்ணு பிலிம்ஸ்' நிர்வாகி திரு. அருணன் இந்த முயற்சியிலிறங்கியுள்ளாராம். படத்தயாரிப்புக்கானபூர்வாங்கவேலைகள் முடிந்துவிட்டதாகவும் தெரிகிறது. இப்படத்தில் யாழ்ப்பாண நகர மண்டபம் எதிரேயுள்ள பூந்தோட்டம், யாழ்ப்பாணக் கோட்டை பெரியகடை, புகையிரதநிலையம் என்பன எல்லாம் பின்னணிக் காட்சிகளாக்கப்படுமாம்! தமிப்படங்களுக்குப் பின்னணி பாடுவதில் முன்னணியிலுள்ள பிரபல பாடகர்கள் இப்படத்திற்கு தங்கள் இனியகுரல்களை வழங்குகிறுர்களாம் படம் களனியாவிலுள்ள 'நவஜீவன்' ஸ்ரூடியோவில் வளருகிறது.

படம் விரைவுப்படமாக -- அதாவது தீபாவளி அன்றே தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் திரையிடப்படலாம் என்று படத்தின் தயாரிப்பாளர் கூறினுர்.

'புரட்சி' வெல்க என்று கலாரசிகர்கள் சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.

('புரட்சி'யின் வளர்ச்சியை நமது சினிமா நிருபர் நேரில் கண்ட வரலாற்றுடன் சுவையான செய்திகளும், பட விமர்சனமும் அடுத்த இதழில் இடம் பெறும். ---ஆ-ர்.)

இந்தியாவில் "கலைச்செல்வி" கிடைக்குமிடம்:

**நேரு நியூஸ் மார்ட்**

மைலாப்பூர், சென்னை.

# ஹலோ!... இது ஸ்டுடியோ ...!

வணக்கம் ரசிகர்களே. சற்று முன்புதான் வாஹினியிலிருந்து வந்தேன். **கடன் வாங்கிக் கல்யாணம்** செய்வதற்காக நாகிரெட்டி சக்கரபாணி ஆகியோர் இடைவிடாது பாடுபடுகின்றூர்கள். சர்வஜீரஞ்ஜனந்தசுவாமி ஜெமினிகணேசன் மாப்பிள்ளை என்றால் பெண்ணின் பெயர் தெரிந்துவிடுமே! சாவித்திரி தான். தங்கவேலு அலக்நிரஞ்சன் சாமியாராகவும்' சில நாட்களுக்கு முன்பு உங்கள் நாட்டிற்கு வந்து நாட்டியமாடிய ஈ. வி. சரோஜா அவருடைய ஆசைக் காதலியாகவும் வருகின்றூர்கள். கல்யாணஞ் செய்து முடிக்கும் பொறுப்பை பிரஸாத் ஏற்றிருக்கின்றூர். விரைவில் 'ஹனிமூனு'க்காக உங்கள் சிலோனுக்குத்தான் வரப்போகின்றூர்களாம். தயாராயிருங்கள் வரவேற்றுச் சிரிக்க.

தமிழ்ப் பேசும்பட உலகில் ஒரு புதுமையைச் சிவகுமார் பிக்ஸர்சார் புகுத்தியிருக்கின்றூர்கள். அவர்களுடைய முதல் படத்தின் கதாநாயகி ஓர் ஊமை. வசனம் எழுதிக் கொண்டிருக்கும் நாகர்கோவில் பத்மநாபனிடம் விபரங்களைக் கேட்டேன். கதாநாயகியைப்போல் அவரும் வாய் திறக்கவில்லை.

பயனீர் பிக்ஸர்சார், ரஞ்சன், அசோகன், பட்டு, ஸ்ரீ ரஞ்சனி ஆகியோரைக் கொண்டு **'கில்லாடி'** ஒருவனை உருவாக்குகின்றனர். 'கில்லாடி'க்குச் சொல்லம்புகளைக் கொடுப்பவர் ஏ. எஸ். முத்து. கட்டுக்காவலை மீறிக்கொண்டு உங்கள் ஊருக்குள் வந்து குதித்து விடுவான். ஜாக்கிரதை.

பிலிம் செண்டரில் ராஜேந்திரன், டி. கே. பாலசந்தர், சிவசூரியன் சரோஜாதேவி சகுந்தலா முதலியோர் **'ஓடி விளையாடு பாப்பா'**வுடன் கூடி விளையாடுகின்றனர். கே. அப்பன்ராஜ் பாப்பாவிற்கு வசனம் கற்றுத் தருகின்றூர். 'ஓடி விளையாடு பாப்பா' உங்களைத் தேடிவர அதிக நாட்கள் செல்லா.

ராஜேந்திரன், அசோகன், பண்டரிபாய், ராஜேஸ்வரி முதலியோரின் நடிப்பை **'படிதாண்டா பத்தினி'**யில் பார்த்தால் நிச்சயம் உருகிப்போய் விடுவீர்கள். பெயரைப் பார்த்ததும் பயப்படுகின்றீர்களா? 'படிதாண்டா பத்தினி' விரைவில் கடல் தாண்டிவிடுவாள்.

இப்பொழுது உங்கள் நாட்டிலும் 'மலிவு விற்பனைக் காலம்' என அறிகின்றேன். யாழ்ப்பாணக் கற்பக தருக்கள் குடம்குடமாகப் பாலைப் பொழிகின்றனவாம்! குடியினால் வரும் சீர்கேட்டை விளக்கச் சிவாஜி கணேசனும் பத்மினியும் சேர்ந்து வரப்போகின்றார்கள். பருகத் தயாராகுங்கள் —அவர்கள் அறிமுகத்தை.

'பாவை விளக்கு' படத் தயாரிப்பாளர் பாடு ஒரே திண்டாட்டமாகிவிட்டது 'அகிலனி'ன் லட்சியக் கதைக்கேற்ற நடிகர்களைத் தேர்ந்தெடுப்பதில் ரொம்பச் சிரமப்படுகின்றார்கள். லட்சக்கணக்கான கடிதங்கள் வந்த வண்ணமே இருக்கின்றன. சிவாஜியைத் தணிகாசலமாக்கினால் பண்டரிபாய் தேவகி. அப்போது பத்மினி, கௌரியா? செங்கமலமா? உமாவா? எம். ஆர். ராதாவிற்கும் தணிகாசலத்திற்கும் எட்டாம் பொருத்தம். ஜெமினியால் உணர்ச்சியை ஒரே அடியாகக் கொட்ட முடியாது. இதற்கிடையில் வேறு சில குரல்கள் ஒலிக்கின்றன **'அகிலனை'**யே கதாநாயகனாக்கினால்...! இதோ நானும் அதைத்தான் அவர்களிடம் சொல்லப் போகிறேன். வரட்டுமா?

-- **கிதன்.**

# கே. ஆர். லிங்கன்'ஸ்

## மிளகாய்த்தூள், கோப்பித்தூள்

பாவிப்பாளர்கட்கு

# விசேஷ அறிவித்தல்


இப்பொழுது மிகவும் முன்னேற்றமான முறையில் தயார் செய்கிறோம். உங்கள் குடும்பத்துக்கு ஒரு பத்து சதப் பைக்கற் திருப்தி என்பது உறுதி. சிக்கனமான முறையில் உங்கள் சாப்பாட்டை தயார் செய்ய எங்களுடைய தூள் வகைகளைப் பாவியுங்கள். எப்பொழுதும் திறமாயிருப்பது எங்களுடைய தூள் வைகைகள் என்பதை மறந்து விடாதீர்கள்.

**கே. ஆர். லிங்கம் மில்ஸ்**
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*

விநியோகஸ்தர்கள்:

**மில்க் வைற் சோப் வோர்க்ஸ்**
527, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.


தமிழ் இலக்கிய மன்றத்திற்காக சு. இராஜநாயகம் அவர்களால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி மகேஸ்வரன் அச்சகத்தில் அச்சிடுவித்து வெளியிடப்பட்டது.



Always Use

**K. P. LINGAM Brand**

# GINGELLY OIL

And enjoy Fine Health

Prepared at
Neelipanthanai, **Karainagar.**

Distributors:

## LINGAM STORES

**26, Manipay Road,**
**JAFFNA.**

*Grams:* "SOTHY" *Phone:* **457**




செல்லம்ஸ்

கவர்ச்சியான படங்கள் பிடிக்க ஏற்ற